# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக
# அருள்மிகு
# பார்வதியம்பாள் ஸமேத பரமேஸ்வரன் தேவஸ்தானம்




# திருவூஞ்சல்

# 2011

"KALAA POOSHANAM"
K.S.SIVAGNANARAJAH
RETIRED VICE PRINCIPAL
A[illegible]ARATHAM ROAD
KOKUVIL WEST

17/08/2017

உ
சிவமயம்



RETIRED VICE PRINCIPAL
KOKUVIL WEST

# அருள்மிகு
# பார்வதியம்பாள் ஸமேத பரமேஸ்வரன் ஆலயம்

## (மூலஸ்தான விக்கிரகங்கள்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக

# அருள்மிகு பார்வதியம்மாள் ஸமேத பரமேஸ்வரன் தேவஸ்தான திருவூஞ்சல்


பதிப்பாசிரியர்:

ப. கணேசலிங்கம்
சிரேஷ்ட விரிவுரையாளர்
இந்துநாகரிகத்துறை,
கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



வெளியீடு:

இந்து மன்றம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
இலங்கை.

23.05.2011

உ

சிவமயம்

# முன்னுரை

**சைவத்திரு. மு.ஞானப்பிரகாசம்.**
**தலைவர், பரமேஸ்வராக் கல்லூரி,**
**இயக்குனர் சபை.**

பரமேஸ்வராக் கல்லூரி இயக்குனர் சபையினரின் ஆதரவுடன் இயங்கிவரும் யாழ்பல்கலைக்கழக ஆலயபரி பாலனசபையினரால், எச்சரீக்கை,பராக்கு - லாலி -மங்களம் முதலியவற்றோடு கூடிய அருள்மிகு பார்வதியம்பாள் சமேத பரமேஸ்வரன் திருவூஞ்சல் இத்தால் வெளியிடப்படுகிறது. திருவூஞ்சல் ஆசிரியர் பிரம்மஸ்ரீ மா.த. ந. வீரமணிஐயர் அவர் களின் சிவபக்தி, புலமை எல்லோருக்கும் தெரிந்ததே. ஆலய பரிபாலனசபையினரின் முதல் வெளியீடாக வெளிவரும் இந்நூலைப் பெற்று, படித்து, யாவரும் பயன் பெற வேண்டு மென்று எல்லாம் வல்ல பார்வதி பரமேஸ்வரனை இறைஞ்சு கின்றோம்.

உ

சிவமயம்

# அறிமுகவுரை

**பேராசிரியர் வி.சிவசாமி**

**ஸ்ரீபரமேஸ்வரன் ஆலயபரிபாலனசபை தலைவர்**

சைவப்பெருவள்ளலார் சேர்.பொன். இராமநாதன் ஏறக்குறைய 70ஆண்டுகளுக்கு முன் அமைத்த ஸ்ரீ பார்வதீ ஸமேத பரமேஸ்வரன் ஆலயம் இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இதயம் போன்றிலங்குகின்றது, யாவருக்கும் இன்னருள் சுரக்கின்றது, ஈராண்டுகளுக்கு முன் புனராவர்த்தன மஹாகும்பாபிஷேகம் நடத்தப் பெற்றுப் புதுப் பொலிவுடன் திகழ்கின்றது. புராதன வரலாற்றுப் புகழ்பெற்ற திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சரம், போன்று, இது பரமேஸ்வரம் எனும் திருப்பதியாகத் திகழ்கின்றது. இவ்வாலயத்திலே எழுந்தருளியிருக்கும் எம்பிரானுக்கும், எம்பிராட்டிக்கும் இவ்வாண்டு திருவூஞ்சல் பாடத் திருவருள் பாலித்துள்ளது.

இறைவனும், இறைவியும் தலைசிறந்த கலைப் பிரியர், கலைவடிவமாகவே பல அன்பர்களுக்குக் காட்சி யளிக்கின்றனர்: கலையின் உந்நதமான இலக்குமிவர்களே, பல்வேறு வகையான இசைப்பாடல்களிலே ஊஞ்சற்பாவும் ஒரு வகையே. இது பொதுமக்கள் இசைமரபினையடிப் படையாகக் கொண்டது. பலரையும் ஈர்க்க வல்லது. இறை வனைப் பற்றிய ஊஞ்சற் பாக்கள் பலரையும் ஈர்த்து,

இறைவன் பாற்படுத்தி ஈடேற்றும் பாங்கில் அமைந்துள்ளன. குழந்தைகள், சிறுவர்கள், மணமக்கள், அரசர் முதலியோரை ஊஞ்சலில் வைத்து ஊஞ்சலாடிப் பாடி இன்புறச் செய்தல் போல பொதுவாக இறைவனுக்கும் இறைவிக்கும் நைமித்திய விழா முடிவிலே, குறிப்பாகத் திருக்கல்யாணத் திருவிழாவின் போது ஊஞ்சற்திருவிழா (டோலோத்ஸவம்) நடாத்துதல் வழக்கமாகும்.

ஸ்ரீபார்வதீஸமேதபரமேஸ்வரன் பெயரிலான திருவூஞ்சற்பாக்களையும் அவற்றின் தொடர்ச்சியாக இடம் பெறும் எச்சரீக்கை பராக்கு, லாலீ, மங்களம் ஆகியன வற்றையும், பரமேஸ்வரத்தில் மிக்க ஈடுபாடுள்ளவரும், இயலிசைவாரிதியும், கவிமாமணியுமான பிரம்மஸ்ரீ ந. வீரமணிஐயர் அவர்கள் திருநெறிய தெய்வத்தீந்தமிழிலே, பக்திச்சுவை நனிசொட்டச் சொட்ட, மண்வாசனை நன்கு கமழ அழகுற இயற்றி எம்பெருமானதும், எம்பிராட்டியினதும் திருவருளுக்குத் தக்கபாத்திரமாகியுள்ளார். இவருடைய இவ்ஆக்கங்களிலே இறைபக்தி, இசைநயம் மட்டுமன்றி இலக்கியநயமும் நன்கு செறிந்து விளங்குகின்றது. வட மொழிக் காவியவியல் விற்பன்னர் கவிஞனுக்கு அவசிய மெனக்கருதும் பிரதிபா (கவிதாசக்தி), வ்யுத்பத்தி (புலமை), அப்பியாஸம் (இடையறாத பயிற்சி) ஆகியசிறப்பமிசங்கள் கொண்டிலங்கும் நம் ஐயர்அவர்களின் ஆக்கங்கள் குறிப் பிடத்தக்கவையே. இவர் ஈழத்தமிழகத்தின் இன்றைய இணையற்ற சாஹித்தியகர்த்தா என்பதில் ஐயமில்லை.

எடுத்த எடுப்பில் கவிபாடும் "ஆசுகவி" யாகவும்இலங்கும் இவர் இசை, நடனம் மட்டுமன்றித் தமிழ், வடமொழி, இந்துசமயமரபுகள் முதலியனவற்றிலும் நல்ல தேர்ச்சி யுள்ளவர். இவருடைய இசை நடனத் திறமை தமிழ்கூறு நல்லுலகம் நன்கு தெரிந்ததே. நம் நாட்டிலுள்ள நூற்றுக் கணக்கான கோவில்களுக்குத் திருவூஞ்சல்கள் பாடியுள்ளார். பல நாட்டியநாடகங்களைத் தயாரித்து மேடையேற்றியுள் ளார். மேலும் கர்நாடக இசைக்கான 72 மேளகர்த்தா ராகங்களுக்கும், 175 தாளங்களுக்குமான இசை உருப் படிகளை இயற்றியுள்ளார். தமிழகத்திற் கூட கோடீஸ்வர ஐயர் போன்ற ஒரு சிலரே இவ்வாறு இயற்றியுள்ளனர். எனினும் இத்தகைய ஒரு தலைசிறந்த வாக்கேயகாரரை இதுவரை நம் நாட்டவர் தக்கவாறு கௌரவிக்காமை வியப்பினை அளிக் கின்றது. இனிமேலாவது இது பற்றிச் சித்திப்பார்களாக. நம் ஐயர்அவர்களின் கலைவாழ்வு மேன்மேலும் சிறப் படையவும் அவர் நீண்ட காலம் வாழ்ந்து கலைத்தொண்டு புரியவும் பார்வதீஸமேத பரமேஸ்வரன் திருவருள் பாலிப்பாராக!

மேலும் இப்பிரசுரத்திலே முன்னைய பரமேஸ் வரக்கல்லூரியின் முதன்மைத் தமிழ் ஆசானாக விளங்கிய வித்துவான் க. வேந்தனார் அவர்களின் "பரமேஸ்வரம்" எனப் பணிவோம்" எனும் பாடலும், மஹாகும்பாபிஷேகத்தின் போதும், பின்னரும், எம்மால் இயற்றப்பட்ட "ஸ்ரீபார்வதீஸ மேதபரமேஸ்வர" எனத் தொடங்கும் ஸம்ஸ்கிருதக் கீர்த்தனையும் இடம்பெற்றுள்ளன. இதற்கும் ஐயர் அவர்கள் அளித்து வந்த ஊக்கம் குறிப்பிடற்பாலதே.

இத்திருவூஞ்சற் பாக்களை மனமுவந்து மிகக் குறுகிய காலத்திலே இயற்றித் தந்துள்ள நம் ஐயர் அவர்களுக்கும், இத்திருவூஞ்சலின் அவசியத்தை நன்கு உணர்ந்து ஊக்கமளித்த விரிவுரையாளரும் இளம் ஆலய பரிபாலனசபை உறுப்பினருமாகிய திரு. ப. கணேசலிங்கம் அவர்களுக்கும், இப்பாடல்களை மனமுவந்து தக்கவாறு அச்சேற்றி உதவிய மஹாத்மா அச்சக உரிமையாளர் திரு. ந. தெய்வேந்திரன் அவர்களுக்கும் ஆலயபரிபாலனசபை யின் சார்பிலே மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

" எல்லோரும் இன்புற்றிருக்கவே"

**திருநெல்வேலி**
**09.06.1993**



உ

சிவமயம்

# சிவாகமக்கிரியாபாநு சிவஸ்ரீ. சோ. இ. பிரணதார்த்திஹரக் குருக்கள் அவர்களின் ஆசிச்செய்தி

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக இந்துமன்றத்தின் "பார்வதிசமேத பரமேஸ்வரன்" ஆலய திருவூஞ்சல்பதிகம் நூல் வெளயீடு குறித்து மகிழ்ச்சியடைகிறேன்.

ஒரு ஆலயத்தின் ஊஞ்சல்பாக்கள் அந்த ஆலயத்தின் வரலாற்று மரபுகள், அங்கு எழுந்தருளி சான்னித்தியம் பெற்றுள்ள மூர்த்திகளின் பெருமை, அந்த இடங்களின் வளமை ஆகியவற்றை எடுத்துக் காட்டுபவையாக இருப்பதைக்காணலாம் ஆகவே அவை மக்களையும், சமூகத்தையும், ஆன்மீகத்தையும் இணைக்கும் செயல் பாட்டைக் கொண்டுள்ளவை எனலாம்.

"பார்வதி பரமேஸ்வரன்" ஆலய ஊஞ்சல் பாக்களை யாத்தவர் சாஹித்தியசிரோமணி அமரர் பிரம்மஸ்ரீ. ந. வீரமணிஐயர் அவர்கள். கலைவாணி அருள்பெற்ற கலைஞர் தன்கற்பனைத் திறத்தால் வரகவியாக விளங்கி வையத்தைப் பாலித்தவர். அவரது ஆன்மா என்றும் ஈசனெந்தை இணையடி நீழலில் வாழும் என்பது நம்பிக்கை.

நூலுக்கு மேலும் மெருகூட்டுவதாக பேராசியர் வி.சிவசாமி அவர்களின் சமஸ்கிருத பாடல்கள் அமைகின்றன. இத்தகைய சிறந்த நூலை வெளியிடும் இந்து மன்றத்தின் சேவை பாராட்டுக்குறியது. இது போன்ற

ஆன்மீகத் திருப்பணிகளை மேலும் முன்னெடுப்பதற்கு அவர்களுக்கு பார்வதி சமேத பரமேஸ்வரன் திருவருள் என்றும் கிடைத்து சகல செல்வயோகமிக்க பெருவாழ்வு வாழப்பிரார்த்தித்து ஆசி களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சைவமக்கள் யாவரும் காலத்தின் பெறுமதியான இந்நூலை பெற்று ஆவணப்படுத்தி வைத்து பயனடைய வேண்டியது முக்கிய கடமையாகும்.

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"



# வாழ்த்துரை

**பேராசிரியர் வசந்தி அரசரத்தினம்,**
**துணைவேந்தர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

யாழ் பல்கலைக்கழகம் இந்துமத கலாச்சாரத்துடன் இரண்டறக் கலந்த ஒரு கல்வி நிறுவனம் என்பது உலகறிந்த விடயம். 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் சேர் பொன் இராமநாதன் அவர்கள் ஸ்ரீ பார்வதிசமேத பரமேஸ்வரர் ஆலயத்தினையும் பரமேஸ்வராக்கல்லூரியையும் ஒரு வளாகத்தில் அமைந்துள்ளமையே இதற்கு மூலமாகும். இன்று பரமேஸ்வராக்கல்லூரியே ஈழத்தில் சிறந்த பல்கலைக் கழகமாகத் திகழ்கிறது. இது பார்வதி சமேத பரமேஸ்வரனின் அருட்கடாட்சம் எம்மக்கள் மீதும் மண்மீதும் பட்டமையி னாலேயே ஆகும். இப்பொழுது இந்துமதத்தை வளர்க்க பல்கலைக்கழக சமூகத்தினர் இந்துமன்றத்தினை ஸ்தாபித்து அதனூடு நூல்கள், பிரசுரங்களை வெளியிட்டும் ஏனைய வழிகளிலும் பணியாற்றுவது வரவேற்கத்தக்கதாகும்.

இந்துமன்றத்தினரால் இப்பொழுது வெளியிடப்படும் இந்நூல் பல அம்சங்களையும் ஒருங்கே கொண்டதாக அமைந்திருக்கின்றது. முதலில் பேராசிரியர் வி. சிவகாமி அவர்களினால் பாடப்பட்ட "ஸ்ரீபார்வதிசமேத பரமேஸ்வரர்" பாடல்கள் சமஸ்கிருதப் பாடல்களாக அமைந்திருக்கின்றமை சிறப்பிற்குரியதாகும். காரணம் சமஸ்கிருதமே இந்துமத இலக்கியங்களில் மூலமொழியாகும். பேச்சுவழக்கில் சமஸ்கிருதம் அழிந்தாலும் இலக்கியங்களினூடு தொடர இப்பாடல்களும் ஆவனசெய்யும் என நான் எதிர்பார்க் கின்றேன்.

இன்னும் என்காதுகளில் ஒலித்த வண்ணமாய் இருக்கின்ற "கற்பகவல்லி நின்பொற்பதங்கள் பிடித்தேன் நற்கதி அருள்வாயம்மா...." என்கின்ற பாடலை எழுதிய ஈழத்தில் புகழ்பூத்த முத்தமிழ் வித்தகர் பிரம்மஸ்ரீ ந. வீரமணிஐயர் அவர்களின் வாழ்க்கைவரலாறு இந்நூலில் இடம்பெற்றுள்ளது. பலநூறு பரதக் கலைஞர்களையும் இசையாளர்களையும் சிருஷ்டித்த இக்கலைஞானியின் வாழ்க்கை வரலாற்றை வெளியிடுகின்றமை உண்மையில் எமது பல்கலைக்கழகத்திற்கு பெருமை சேர்க்கின்ற விடய மாகும். அடுத்து திருத்தலங்களின் மகத்துவங்களைச் சொல்லும் இலக்கியங்களில் மூலமூர்த்தியை புகழ்ந்து பாடும் திருவூஞ்சல் பற்றியதுமான அம்சங்களை உள்ளடக் கியுள்ளமை தெய்வ நம்பிக்கையை மேலும் வளம்படுத்துவாக அமையும்.

இந்துமன்றத்திற்கு வேண்டிய பல அம்சங் களையும் தன்னகத்திலே கொண்டு இந்நூல் வெளிவருவதை யிட்டு நான் மகிழ்ச்சி அடைவதோடு மேலும் இந்துமன்றத் தினர் பல நூல்களை வெளியிட என் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.



# வாழ்த்துரை

**பேராசிரியர் க. சிற்றம்பலம்,**
**தலைவர்,**
**பரமேஸ்வராக்கல்லூரி இயக்குநர்சபை,**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துமன்றத்தினர் 1993இல் வெளியிடப்பட்ட பார்வதிசமேச பரமேஸ்வரப் பெருமானின் திருவூஞ்சல் பாடல்களை மறுபிரசுரம் செய்வதையிட்டு மகிழ்சியடைகிறோம். எம்பெருமானின் ஆலயம் பல்கலைக்கழகத்தின் இருதயம் போல் இதனை இயக்குகின்றது. அவனின்றி ஓரணுவும் அசையாது. சைவப்பெருவள்ளல் சேர் பொன் இராமநாதன் ஐயர் அவர்கள் சைவச்சிறார்களுக்காக 1921இல் பரமேஸ்வராக் கல்லூரியை ஸ்தாபித்தார். 1913இல் அவர் சைவமங்கையருக்காக ஸ்தாபிக்கப்பட்டதே இராமநாதன் கல்லூரி யாகும். இவ் இருபெரும் கல்லூரிகளை ஸ்தாபித்ததன் மூலம் சமய ஒழுக்கத்துடன் நட்பண்புகளுடன் எமது சமுகத்தின் விழுமியங் களையும் போற்றி ஒழுக்க சீலர்களாக சிறார்கள் வாழ வேண்டுமென்பதே அவரது பெருவிருப்பமாக இருந்தது.

கல்வியை கசடறக்கற்று கற்றவற்றின் அடிப்படை யில் வாழ்ந்து தமக்கும் தன்னைச் சார்ந்த சமுகத்திற்கும் பணிபுரியும் ஒரு சமூகம் உருவாக வேண்டு மென்பதே சைவவள்ளலின் வேணவாக விருந்தது. ஆதலால் நித்தமும் காலையும் மாலையும் எம்பெருமானின் பாதாரவிந்தங்களை இறைஞ்சி தமது கல்வியைத் தொடரும் மாணவச் செல்வங்கள் சைவப்பெருவள்ளலின் எதிர் பார்ப்பை நிறைவேற்றுவார்கள் என்பது எமது நம்பிக்கையாகும்.

இறைபக்தியும் ஒழுக்கமும் மிகமிக அருகிக் காணப்படும் இந்நாளில் எம்பெருமானின் சிந்தனையில் இருந்து நல்ல மானிடர்களாக வாழ்ந்து இருத்தல் வேண்டும். சிவகதி அடைவதே நமது நோக்கமாகும். இப்பெரும் பணிக்கு இத்தகைய மீள் பிரசுரம் வழிசமைக்க வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

**நன்றி**

# வெளியீட்டுரை

யோ. பிரதீப்,
தலைவர்,
இந்து மன்றம்,
யாழ் பல்கலைக்கழகம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இந்து மன்றத்தினரால் காலங்காலமாக இந்துசமயம் தொடர்பான துண்டுப் பிரசுரங்கள், இந்துநெறி போன்ற புத்தகங்கள், சஞ்சிகைகள் என்பன வெளியிடப்பட்டு வருகின்றன. அந்த வகையில் 1993ஆம் ஆண்டு அமரர் பிரம்மஸ்ரீ. மா. த. ந. வீரமணி ஐயர் அவர்களால் ஸ்ரீ பார்வதி சமேத பரமேஸ்வரன் மீது பாடப்பட்ட திருவூஞ்சல் பாடல்களை மீள்பிரசுரம் செய்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஈழத்தில் அமைந்து விளங்குகின்ற திருத்தலங்கள் மீதும் அங்குறையும் இறைவன், இறைவி பேரில் பல திருவூஞ்சல்கள் அவ்வப்பொழுது வாழ்ந்த ஈழத்துப் புலவர்களால் இயற்றப்பட்டுள்ளன. அந்தவகையில் அல்வாய் விநாயகர் ஊஞ்சல், ஏழாலை அத்தியடிவிநாயகர் ஊஞ்சல், கதிரேசர் ஊஞ்சல் என்பவற்றைப் போன்றே ஸ்ரீபார்வதி சமேத பரமேஸ்வரன் மீதும் ஐயா அவர்களால் செந்தமிழிலே பக்திசுவையோடு நனி சொட்டச்சொட்ட பாடியுள்ளார். இவரது இவ்ஆக்கங்களில் இறை பக்தி, இசைநயம், இலக்கியநயம் என்பன நன்கு செறிந்து விளங்குகின்றது.

இத்திருவூஞ்சல் பாடல்களின் அவசியத்தை உணர்ந்து மீள்பிரசுரம் செய்வதற்கு ஊக்கமளித்த சிரேஸ்ட விரிவுரையாளர் திரு. ப. கணேசலிங்கம் அவர்களிற்கும், வாழ்த்துரைகளை வழங்கிய துணைவேந்தர் பேராசிரியர்கள், குருக்கள் அவர்களிற்கும் மனமுவந்து தக்கவாறு அச்சேற்றி உதவிய ஷாம்பவி பதிப்பகத்தினருக்கும் இந்துமன்றம் சார்பிலே மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

# திருக்கோயில்களின் தல இலக்கிய மரபில் திருவூஞ்சல்கள்

திரு.ப.கணேசலிங்கம்
சிரேஷ்ட விரிவுரையாளர், இந்துநாகரிகத்துறை,
யாழ் பல்கலைக்கழகம்.

இந்தியாவிலும் ஈழத்திலும் தோற்றுவிக்கப் பெற்ற திருத்தலங்கள் மீது நாயன்மார்கள், ஆழ்வார்கள், மற்றும் பிற்பட்ட காலத்துப் புலவர்கள், அறிஞர்கள், சித்தர்கள், பக்தர்கள் ஆகியோர்கள் பல்வேறு வகையான அருட்பாடல் களைப் பாடிப் போற்றித் துதித்திருக்கின்றார்கள். இத்தலங் களை மையப்படுத்தி ஓர் இலக்கியமரபு அல்லது தோத்திரமரபு அல்லது பிரபந்தஇலக்கியமரபு அல்லது தலஇலக்கியமரபு தோன்றிவளர்ந்து வருகின்றதை நாம் அவதானிக்கலாம். இந்துத் திருத்தலங்கள் மீது தலபுராணங் கள் இயற்றுகின்ற மரபு இந்நாடுகளில் மட்டு மல்லாது தென்கிழக்காசிய நாடுகளிலும் மற்றும் இந்துக்கள் பரந்து வாழ்ந்து திருக்கோயில்கள் அமைத்து வழிபாடு இயற்று கின்ற நாடுகளிலும் காணப்படுகின்றன. சிறப்பாக கோயில்கள் நிறைந்த பகுதிகளாக விளங்குகின்ற இந்தியா விலும், ஈழத்திலும் ஏராளமான தல இலக்கியங்கள் அவ்வவ்போது வாழ்ந்த நாயன்மார்களாலும், ஆழ்வார் களாலும், சித்தர்களாலும், புலவர்களாலும் இயற்றப்பட்டு வந்தன.

தல இலக்கியங்கள் பொதுவாக கோயில் கொண்டெழுந்தருளியுள்ள இறைவனின் பெருமைகள், மூர்த்தி, தல, தீர்த்தவிசேடங்கள், வழிபட்டு முத்தியடைந் தோர் வரலாறுகள், அற்புதங்கள், நாட்டுச் சிறப்பு, நகரச்

சிறப்பு போன்ற இன்னோரன்ன விபரங்களை பாடு பொருளாகக் கொண்டவை. அதாவது இறைவனின் புகழை ஒருதலத்துடன் இணைத்து, அத்தலத்தின் பெருமை யினையும், அங்குள்ள தீர்த்தத்தின் பெருமையினையும் அவ்விறைவனின் பெருமையினையும் அவ்விறைவனின் பெருமையினையும் இத்தல இலக்கியங்கள் எடுத்தியம்பு கின்றன.

ஈழத்திலுள்ள திருக்கோயில்கள் மீது தோத் திரங்கள் பாடுகின்ற மரபானது நாயன்மார்கள் காலத்திலும் காணப்பட்டன. ஈழத்திலே உள்ள திருத்தலங்களை முதன்மைப்படுத்திப் பாடுகின்ற தல இலக்கியங்களில் முதன் முதலில் தோன்றியது பதவியாவிற் கிடைத்த செய்யுளேயமை கின்றது. இக்கருத்தினைப் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை "சைவக்கோயிலைப்பாடும் ஈழத்து இலக்கியங்களுள் இன்று கிடைக்கும் ஈழத்தவராற் பாடப்பட்ட மிகத்தொன்மையான செய்யுளாகத் பதவியாச் செய்யுள் காணப்படுகின்றது எனக்கூறியுள்ளமை கவனிக்கத்தக்கது. ஈழத்திலுள்ள பாடல் பெற்ற சிவத்தலங்களாக விளங்குகின்ற திருக்கேதீஸ்வரம், திருக்கோணஸ்வரம் ஆகிய தலங்கள் மீது திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளும், சுந்தரமூர்த்தி நாயனாரும், திருப்பதிகங்களைப் பாடியருளியுள்ளார்கள். நாயக்கர் காலப்பகுதியில் வாழ்ந்த அருணகிரிநாதசுவாமி களும் ஈழத்திரு நாட்டிலுள்ள முருகத்தலங்கள் மீது திருப்புகழ் பாக்களைப்பாடியுள்ளார்கள். நாயன்மார்களது திருப்பதிகங்கள் பாடுகின்ற மரபினைத் தொடர்ந்து ஈழத்து திருக்கோயில்கள் மீது பிரபந்த வகைகளை பயன்படுத்தி அவ்வப்பொழுது வாழ்ந்த அருளாளர்கள், புலவர்கள், கவிஞர்கள் பல்வேறு தோத்திரங்களையும் புகழ்ப்பாக்களை யும், தலபுராணங்களையும திருவூஞ்சல் பாக்களையும் பாடியருளியுள்ளார்கள்.

போர்த்துக்கேயர்,ஒல்லாந்தர் ஆட்சிக்காலங் களிலே சைவக்கோயில்களுக்கு ஏற்பட்டஅழிவையும் சைவ சமயத்திற்கு ஏற்பட்ட தீங்கையும் கண்ட ஒல்லாந்தர் ஆட்சிக்காலப் புலவர்கள் தலங்களைப் போற்றி மக்களி டையே சமயப்பற்றை ஏற்படுத்தவே இத்தல விலக்கியங் களைப் பாடியிருக்க வேண்டும். தமிழநாட்டில் விஜய நகர நாயக்கமன்னர் ஆட்சிக்காலத்தில் இஸ்லாமியப் படை யெடுப்பினால் கோயில்கள் அழியும் நிலையேற்பட்ட பொழுது தலங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துத் தலபுராணங்கள் தோற்றம் பெற்றமையை காணமுடிகிறது. ஈழத்திலும் அப்படியான ஒரு சூழ்நிலையிலே, அதாவது போர்த்துக் கேயர், ஒல்லாந்தர் ஆட்சிக் காலங்களில் இந்துக் கோயில் களுக்கு அழிவு ஏற்பட்ட நிலையிலே இத்தகைய தலசம்பந்த மான பிரபந்தங்கள் தோற்றம் பெற்றுள்ளன.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சியினை அடுத்து ஈழத்தில் ஆங்கிலேயர் ஆட்சி நிலவிய பத்தொன் பதாம் நூற்றாண்டில் இந்து இலக்கியங்கள் பரவலாகவும், பலவகையினவாகவும்தோற்றம் பெற்றன. வழிபடு தலங் களையும்,தலமுறை தெய்வங்களையும் போற்றும் செய்யுளி லக்கியங்களுடன் சைவசமயத்தின் உண்மைப் பொருளை சைவக்கிரியைகளை எல்லாம் வசனநடையில் விளக்கும் இலக்கியங்களும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் எழுந் துள்ளன. இந்து இலக்கியங்கள் பத்தொன்பதாம் நூற்றாண் டில் இவ்விதம் வளர்ச்சியடைய அந்தக் காலப் பின்னணியும் அப்பின்னணியிற் செயற்பட்ட நாவலரது இயக்கமுமே காரணமாக அமைந்தன.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோற்றம் பெற்ற இந்து இலக்கியங்களைச் செய்யுளிலக்கியங்கள், வசன இலக்கியங்கள் என வகைப்படுத்தலாம். செய்யுளிலக் கியங்கள் முன்னைய காலப் பகுதியிலேயே தோன்றிய இந்து இலக்கியங்களைப் போன்று இந்துத் தலங்களையும், தலை முறைத் தெய்வங்களையும் போற்றுவனவாகவே காணப்படு கின்றன. பொதுவாகக் கூறின் ஈழத்தில் நல்லூர், திருக்கோணேஸ்வரம், நகுலேஸ்வரம், மாவிட்டபுரம் முதலான தலங்களின் பேரிலே அதிக இலக்கியங்கள் எழுந்துள்ளன எனலாம்.

இந்து மக்கள், இந்துசமயக்கடவுளர்களான விநாயகர், முருகன், சிவன்,சக்தி, விஷ்ணு, வைரவர் ஆகிய தெய்வங்களுக்கு சிறிய அளவிலும் பெரியளவிலும் திருக்கோயில்கள் அமைத்து வழிபாடியற்றி வருகின்றார்கள். இத்திருத்தலங்களை மையப்படுத்தி தல இலக்கியங்கள் பாடுகின்ற மரபு இந்தியாவிலுள்ள திருக்கோயில்களிலும் ஈழத்திலுள்ள கோயில்களிலும் தோன்றி வளர்ந்ததைக் காணமுடிகின்றன. இத்தகைய தல இலக்கியங்களை ஆக்கிப் பேணுகின்ற பணியிலே ஈழத்திலும் இந்தியாவிலும் ஒவ் வொரு காலகட்டப் பகுதியிலும் தோன்றி வாழ்ந்த இந்து சமயப் பெரியார்கள் (அறிஞர்கள்) சான்றோர்கள் ஈடுபட்டு உழைத்து வந்துள்ளார்கள். ஈழத்திலே யாழ்ப்பாணத் தமிழ் அரசர் காலந் தொடக்கம் அண்மைக் காலம் வரை வாழ்ந்த இந்துசமய அறிஞர்கள் இந்துசமயத்திற்கு ஆற்றிய பங்களிப்புக்களில் திருத்தலங்களை முதன்மைப்படுத்திப் பல பிரபந்தங்களை இயற்றுகின்ற பணிகளில் ஈடுபட்டமை இங்கு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

பிரபந்தம் என்பது பிர-மிகுந்த பந்தம் - கட்டு என்னும் இரு சொற்களாலாய தொடர். ஒவ்வொரு பிரபந்தமும் யாதாயினும் ஒரு கட்டினால் கட்டப்படுவது என்பது பொருள். தமிழிலுள்ள பிரபந்தங்கள் தொண்ணூற்றாறு வகையின எனக் கூறப்படுகின்றது. ஈழநாட்டுப் புலவர்களாலும் இந்திய நாட்டுப் புலவர்களாலும் பாடப்பட்ட பிரபந்தங்கள் முப்பதுக்கு மேற்பட்ட வகையின வாகும். அவையாவன அகவல், அந்தாதி, அம்மானை, இரட்டைமணிமாலை, இருபாவிருஃபது, உலா, ஊஞ்சல், ஒருபாகவொருபஃகலம் பகம்,கலித்துரை, கலிப்பா, கலிவெண்பா, காதல்காவியம், கீர்த்தனை, கும்பி, குறவஞ்சி, கொவை, சதகம், சிந்து, தூது, நாண்மணிமாலை, பள்ளு, பிள்ளைத்தமிழ், புராணம், மடல், மான்மியம், முன்மணிமாலை, முன்மணிக்கோவை, விருத்தம், வெண்பா, முதலியன ஊஞ்சல் (ஊசல்) ஈழத்து இந்தியப்புலவர்களால் பெரிதும் சிறப்பாகக் கையாளப்பெற்ற பிரபந்தங்களுள் இதுவும் ஒன்றாகும்.

ஊஞ்சல் என்ற சொல்லுக்கு இணையாக அதைக் குறிக்க "ஊசல்" எனும் சொல்லும் இலக்கியங்களில் கையாளப்படுகின்றது. மலை யாளமொழியில் ஊஞ்சல் என்பது ஊஞ்ஞான், ஊஞ்ஞல் என்றும் வழங்கப்படுகின்றது. குஞ்ஞால் என்றும் ஊஞ்சலை அழைப்பதாகத் தெரிகின்றது. இதைக் குஞ்சலம் என்று வழங்குவதையும் காணலாம். "தாப்பு" என்ற பெயரும் ஊஞ்சலைக் குறிக்க இலக்கியங் களில் வழங்கப்படுவதைக் காணலாம். தான் நிற்கும் நிலையினின்று முன்னும் பின்னும் அசைதல் என்னும்

பொருள் கொண்ட ஊஞ்சலை நாம் நன்னூல் போன்ற இலக்கண நூல்களில் குறிப்பிடப்படும் தாப்பிசைப் பொருள் கோளுடன் ஒப்புநோக்கிச் சிந்திக்கலாம்.

**"இடைநிலை மொழியே யேனையீ ரிடத்தும்**
**நடந்து பொருளை நன்னுதல் தாப்பிசை"**

என்பது நன்னூல் நூற்பா. அபிநயம், நேமிநாதம், இலக்கணவிளக்கம் இலக்கணக்கொத்து, தொன்னூல் விளக்கம் சுவாமிநாதம், முத்துவீரியம் தமிழ்நூல் போன்ற பல இலக்கண நூல்கள் தாப்பிசைப் பொருள்கோளை இதே பொருள் படவிளக்குகின்றன. இங்கு சுட்டப்படும் "தாப்பு" என்பது தாம்பு என்பதின் திரிந்த வடிவமாகக் கருதப் படுகின்றது. எனவே ஊஞ்சல் தாப்பு, தாம்பு இடைநிலை விலக்கு என்பன தம்முள் தொடர்புடையனவாகக் கருதத் தக்கன. ஊஞ்சலைக் குறிக்க ஊசல், துருவை, துடுப்பு, தூரி, விண்டாட்டு என்ற சொற்கள் நிகண்டுகளில் வழங்கப்படு கின்றன.

ஊஞ்சல், ஊசல் என்ற இரண்டு சொற்களும் இலக்கியங்களில் பயின்று வருகின்றன.சங்க இலக்கியங் களில் "ஊசல்" என்ற சொல் மட்டுமே பயின்று வருகின்றது. ஊஞ்சல் என்னும் சொல் முதன் முதலில் வில்லிபாரதத்தில் தான் இடம்பெறுவதாகத் தெரிகின்றது. இலக்கிய ஆட்சிகள் அனைத்தையும் வைத்து நோக்கும்போது ஊசல்என்பதே மிகுதியாக ஆளப்பெற்றிருக்கின்றது. அதன் வினை வடிவங் களாக ஊக்க, ஊங்க என்பன சங்க இலக்கியங்களில் பயின்று வந்துள்ளன. மொழியியல் ஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்கள் "ஊஞ்சல்" என்பதினின்று ஊசலைத் தோற்றுவிக் கின்றார். உந்து-உஞ்சு-உஞ்சு-உஞ்சல்-உஞ்சல்-ஊஞ்சல் என்று ஊஞ்சலுக்கு விளக்கம் தந்து பின்னர் அந்த ஊஞ்சளின்றும், ஊசலை வருவித்துக் காட்டுகின்றார்.

தமிழ் மலையாளம் கன்னடம் தெலுங்கு துளு கொலாமி நாய்க்கி பர்ஜி கதபா போன்ற பலமொழிகளில் ஊஞ்சல் சொல் பல்வேறு இடங்களில் இடம்பெறுகின்றது. எனவே ஊஞ்சல் என்ற சொல்லை முந்தைய வடிவமாகவும் அதனின்று தோன்றிய வடிவமாக ஊசல் என்ற சொல்லையும் கொள்ள முடிகின்றது. இயல்பாகத் தோற்றம் பெற்ற ஊசலாட்டம் பொழுது போக்கு ஊஞ்சலாக உருப்பெற்ற பின்னர் ஊஞ்சலாடுகின்ற வழக்கத்தை கிராமப்புறங்களில் அதிகமாகக் காணவியலாது. சில விழாக்களில் இவ்வாட்டம் ஆடப்பெறுவதுண்டு. ஆலயவிழாக் காலங்களில் திருவிழா நாளின் போது இறைவன் இறைவியை நீராட்டி அலங்கரித்து ஊஞ்சலில் வைத்து மணம் செய்வித்து, ஆட்டி இன்புறு கின்றனர் இறையடியார்கள். இந்த ஊஞ்சலுக் கென்றே சில கோயில்களில் ஊஞ்சல் மண்டபங்கள் அமைந்திருக்கின்றது. மணவிழா அல்லது ஊஞ்சல்விழா அந்த மண்டபத்தில் நடைபெறுகின்றது. அப்போது ஊஞ்சல் பாடல்கள் பாடப்படுகின்றன. சில தலங்களில் அவ்வாறு விழாவின் போது ஊஞ்சல் பாடல்கள் பாடப்படாமல் புலவன் தன் கற்பனையின் வளத்தை மட்டுமே கொண்டு இவ்வூசல் இலக்கியம் படைக்கப்படுவதுண்டு. அதற்கெனப் புலவர் களால் ஊஞ்சல பாடல்கள் பாடப்படாதபோது பழம் இறைப் பாடல்களைப் பாடுவதை வழக்கமாகக் கொண்டிருக் கின்றனர். சைவசமய ஆலயங்களில் திருவாசகத்தின் திருப்பொன்னூஞ்சல் பகுதியையும், வைணவ சமயத்துக் கோயில்களில் அக்ஷ்ட பிரபந்தத்தில் அடங்கியுள்ள நாயகர், நாயகியார், ஊஞ்சல்களையும், இசையுடன் பாடி மகிழ் கின்றனர். மணவிழாவின் போது ஊஞ்சலில் மணமக்களை வைத்துப் பிறர் ஆட்டி அவர்களை மகிழ்விக்கின்றனர்.

அவ்வகையிலமைந்த ஊஞ்சல் "திருமண ஊஞ்சல்" என்று அழைக்கப்படும் இறைவன் இறைவியரைப் புகழ்ந்து பாடும் பாடல்களை இவர்களுக்குப் பாடுவதும் உண்டு. ஊஞ்சல் பாடல்கள் என்று பொதுவாக வழக்கிலுள்ள பாடல்களுடன் பாடுவோர் கற்பனையைக் கலந்து பாடுவதும் உண்டு. சில நேரங்களில் அவர்களுக்கென்று ஊஞ்சல் பாடல்கள் எழுதப் படுவதுமுண்டு. அவ்வாறு எழுதப்படுபவர்கள் எழுதிய வருக்குத் தொகை கொடுத்து வந்தனர். இந்நிலை செல்வந் தர்கள் நிலையிலுள்ளோர்களுக்கு மட்டுமே நடைபெற்றிருக் கின்றது. இப்பொருள் பெறும் பலன் பாட்டு நோக்கமன்றி பொது நிலையில் வாழ்த்தும் வண்ணம் -செய்திகளைக் கூறும் வண்ணம் ஊஞ்சல் பாடல்கள் அமைவதும் உண்டு. இவையன்றி பண்டிகைகளின் போதும் ஊஞ்சலாடுவதைச் சில இடங்களில் காணமுடிகிறது. ஓணம், திருவாதிரைப் பண்டிகைகளின் போது ஊஞ்சலாடுவதைக் கேரள மக்கள் வழக்கமாக கொண்டிருக்கின்றனர். அதை யொட்டி அப்பகுதியைச் சார்ந்த தமிழ் நாட்டு மக்களும் இப் பண்டிகைகளில் ஊஞ்சலாடுவதை வழக்கமாகக் கொண்டி ருக்கின்றனர். ஊஞ்சல் வகையினைப் பொதுநிலையில் இரண்டாகப் பகுக்கலாம்.

1. **இலக்கிய ஊஞ்சல்**
2. **நாட்டுப்புற ஊஞ்சல்**

இவ்விரண்டிற்கும் அடிப்படையிலே வேறுபாடுண்டு.

இலக்கியம் என்ற வகைப்பாடு மேலும் இனைக் கக்கூடிய தன்மைத்து. இதனை அடிப்படை நிலையில், இலக்கிய ஊஞ்சல், ஊஞ்சல் இலக்கியம் என்று இரண்டாகப் பகுக் கலாம். இலக்கிய ஊஞ்சல் என்பது இலக்கியத்தில் ஊஞ்சல் என அமையும். சங்ககாலம் தொடர்ந்து இன்றுவரை

எழுந்திருக்கின்ற இலக்கியங்களில் வரும் ஊஞ்சல் தொடர் பான குறிப்புக்கள் இதன் பாற்படும். ஊஞ்சல் இலக்கியம் என்பது குறிப்புக்கள் உறுப்புக்களாக மாற்றம் பெற்று அவை இலக்கிய வகையாக உருவெடுத்து சிற்றிலக் கியம் என்ற முத்திரையைப் பெற்றதைக் குறிக்கும். வேறு வகையில் சொல்வதானால் வளர்ந்து வாழும் ஊஞ்சல் சிற்றிலக் கியங்களைக் குறிக்கும். இவ்விரண்டில் முன்னது தொடக்கம் பின்னது தொடர்ச்சி அல்லது வளர்ச்சியாகும்.

இலக்கியப் பகுதியைத் தொடர்ந்து விழாவூசல் விழாவல்லா ஊசல் என்று இரண்டாக முடியும். விழாக்கள் என்னும் போது பண்டிகைகளும் அதன்கண் அடங்குதல் முறைமை. திருமணம், ஓணம், திருவாதிரை, ஆடிப்பெருக்கு, நலுங்கு போன்ற காலங்களில் -விழாக்களில் -பண்டிகைகளில் ஆடப்படும் ஊஞ்சல் அவ்வப்பெயரைத் தாங்கி நிற்கும். திருமண ஊஞ்சல் என்பது இரண்டாகக் காண இடமளிக் கின்றது. பொதுவாக உள்ள ஊஞ்சல் பாடலை அதாவது பொன்னூஞ்சல் பாடல்களையோ, நாயகியார் ஊஞ்சல் நாயகரூஞ்சல் இவற்றின் பாடல்களையோ பாடி மணமக் களை ஊஞ்சலில் வைத்து ஆட்டி மகிழ்விப்பதும், ஆடிமகிழ் வதும் முதல்வகையாகும். மணமகனும் மணமகளும் எழில்கோலம் கொண்டு திருமணமேடையில் அமர்ந் திருக்கும் காட்சியைக் கண்ட புலவன் புகழ்ந்து ஊஞ்சல் பாடல்களைப் படைப்பது இரண்டாம் வகை. இதற்குப் புலவன் பாடும் பாடல்களில் பாடப்படுவோரின் முன்னோர் சிறப்பு, அவர்தம் பெருமை பண்பு இவற்றுடன் அவர்களைப் புகழ்ந்து வாழ்த்துதல் போன்றன இடம் பெறும். முன்னர் ஒரு குறிப்பிட்ட இறைவன் அல்லது இறைவிபற்றி-இறைவன், இறைவி இருவர் பற்றி ஊஞ்சல் பாடல்களைப் பாடியிருப் பான். அவற்றையே பின்வருவோரும் திரும்பவும் இசையும் பக்தியும் பெருகப்பாடி அத்தலத்து இறைவன், இறைவியரை

பரவுவதும் உண்டு. அது அந்த அந்த ஆலயத் திற்கு என்று விழாக்காலமாகக் கொள்ளப்பட்ட நாட்களிலே மட்டும் நிகழும். அப்போது இருவரின் உருவமும் மூலஸ்தான திலிருந்து நேரம் பார்த்து நாள்பார்த்து வெளிக்கொணரப் பட்டு நீராட்டப்படும். ஊஞ்சல் சுத்தம் செய்யப்பட்டு, பொட்டு வைத்து அலங்காரம் செய்யப்படும். குறித்த நேரத்தில் ஊஞ்சல் மண்டபத்திலோ, ஊஞ்சலுக்கென்று அமைக்கப் பட்ட இடத்திலோ துணிகளிட்டு ஒப்பனை செய்யப்பட்டு இறைவன் இறைவி ஊஞ்சலில் வைத்துப் பாடல்பாடி ஆட்டப்படுவர். அதனைக் கல்யாணஉற்சவம் என்றும் ஊஞ்சல் விழா என்றும் அழைப்பர். ஓணவிழா என்பது திருமாலின் பிறப்பு நாளான ஓணநாளில் கொண்டாடப் படுவது இன்றைய தமிழகத்தில் இவ்விழா கொண்டாடும் வழக்கில்லை. ஆனால் பழந்தமிழப் நாட்டின் பகுதியாகிய சேரநாட்டில் இவ்விழா மலையாள மக்களால் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. ஆனால் இது ஒரு சமய விழாவாக இல்லாமல் நாட்டு விழாவாகக் கொண்டாடப்படுவது குறிப்பிடத்தக்கது. இன்று ஆவணி அவிட்டம் என்று குறிக்கப்படும் ஒன்றே அன்று ஓணநாளாகக் கருதப்பட்டது. இன்றும் கேரளாவிலும் அதை ஒட்டிய தமிழ் நாட்டுப்பகுதியில் ஊஞ்சல் இடம்பெறுகின்றது. தமிழ் நாட்டுப்பகுதியில் ஊஞ்சலை ஓணநாள் மட்டும் அதற்கென்று அமைக்கப்பட்டு இருக்கின்ற கால்களில் மாட்டி ஆடி மகிழ்வர். மற்ற நாட்களில் அவற்றைக் கட்டி வைத்துவிடுகின்றனர். இரண்டு மரங்களுக்கிடையே ஒரு மரத்தைக் கட்டி அதில் ஊஞ்சல் தொங்கவிட்டு ஆடி மகிழ்கின்ற வழக்கம் கேரளாவில் இன்றும் உள்ளது. இந்த நாளில் நாட்களில் ஆடப்படுகின்ற ஊஞ்சல் ஓணவிழா ஊஞ்சல் அல்லது ஓண ஊஞ்சல் என்று அழைக்கப்படு கின்றது. இது போன்றே மற்றவிழாக்களும் அவ்வப் பெயரு டன் ஊஞ்சல் இணைய அமைகின்றன.

விழாவல்லாத ஊஞ்சலை இறைத்தொடர்பு ஊஞ்சல், தனிமனிதத் தொடர்பு ஊஞ்சல் என்று இரண்டாக் கலாம். இறைத் தொடர்பு ஊஞ்சல்கள் சைவம், வைணவம் வீரசைவம் பௌத்தம் என்ற நான்கு மதங்களுக்கும் அமை வதால் அவற்றையும் மதப்பெயர் கொண்டு குறிக்கலாம். இவ்விறைத் தொடர்பான இலக்கியத்தை இதன் தொடர்பு நிலையில் வாழ்த்துப் பாடல், வாழ்த்து இலக்கியம் என்று முறைப்படுத்தலாம். வாழ்த்துப்பாடல் என்பது ஊஞ்சல் இறைவன், இறைவியை வைத்து முன்னையோரின் பக்திப் பனுவல்களை மதத்திற்கேற்பப் பாடி மகிழ்வது. இரண்டாவது வகையினது இறைத்தொடர்பான ஊஞ்சல் சிற்றிலக்கியத் தைச் சுட்டுவது. இறைநிலை ஊஞ்சல் வேறு வகையில் இறைவன், இறைவி, இறையடியார் என்றும் பாகுபடுத் தப்படும். தனிமனிதர்கள் பற்றிய ஊஞ்சல்கள். மன்னர், தலைவர் ஊர்த்தலைவர், பொதுமாந்தர் (செல்வந்தர்) போன்றோருக்கு அமைந்திருப்பதை அறிகின்றோம். இவற்றை நாம் குலம், குலமின்மை அல்லது சார்பின்மை என்ற வகையிலும் காணலாம். வேளாளருக்கும், செங்குந் தருக்கும் அமைக்கப்பட்டிருக்கின்ற ஊஞ்சல்கள் குலச்சார் பினவாகின்றன.

ஊஞ்சல்கள் பற்றிய குறிப்புக்களும், செய்தி களும் பல்வேறு நிகழ்ச்சிகளுடன் தொடர்புபடுத்தப் பட்டு பேசப்படுகின்றன. இத்தன்மைகால அமைப்பிற் கேற்பவும், இலக்கியத்தன்மை, சூழல் இவற்றைப் பொறுத் தும் தம்முள் மாற்றம் பெறுகின்றன. ஊஞ்சல் பற்றிய செய்திகள் சங்க காலம் தொடங்கி இன்றைய இலக்கியம்வரை பரவலாக இடம் பெற்று வருகின்றன. இலக்கியங்களில் வருகின்ற "ஊஞ்சல்" "ஊசல்"என்ற சொற்கள் குழை, குண்டலம் போன்றன ஆடுவதையும் மனஉளைச்சலையும் குறிப்பதாக அமை கின்றன. பக்தி இலக்கியத்தில் அமைந்துள்ள திருப்

பொன்னூஞ்சல் பாடல்கள் நமக்கு ஊஞ்சல் பாடல்களின் ஊஞ்சல் சிற்றிலக்கியத்தின் வளர்ச்சியைக் காட்டுகின்றன. தலைவன், தலைவியரைக் கொண்டு நடந்து வந்த ஊசல் இங்கு இறைவனுக்குச் செல்கின்றது. ஊசல் இலக்கியத்திற்கு முன்னோடிகளாய் தோற்றத்திற்கு ஏதுவாய் இப்பாடல்கள் அமைந்துள்ளன. ஊசல் தனியானதொரு இலக்கிய வகை யாக வளர, இதுவே அடிப்படையாயிற்றெனலாம். மன்ன னையும் இறை வனையும் புகழ்ந்து பாடுவதாக இவை அமைகின்றன. சிற்றிலக்கிய வகைகள் சிலஊஞ்சல் பற்றிய குறிப்புக்களைத் தந்து நிற்கின்றன. கலம்பகம், பிள்ளைத் தமிழ் இவற்றிலும் ஒரே வழி உலக இலக்கியத் திலும் அவை இடம் பெறுகின்றன. கலம்பகத்தில் பதினெட்டு உறுப்புகளுள் ஒன்றாக ஊசல் அமைகின்றது. எனவே அவ்வகையில் பெரும்பாலான கலம்பக இலக்கியங்கள் ஒருபாடல் ஊசல் பாடல்களாக அமைகிறது. கலம்பகத்தில் தொடக்க காலத்தில் பாட்டுடைத் தலைவரே ஊசலாடுமாறு அமையாது பெண்கள் ஊசலாடிக்கொண்டு தலைவனைப் புகழ்ந்து பாடு மாறு அமைந்துள்ளன.

ஊசல் இலக்கியங்கள் ஒவ்வொன்றும் தோன்றிய காலத்தைத் தெளிவாக வரையறுக்க இயலவில்லை. முதல் ஊசல் இலக்கியம் தோன்றிய காலமும் தெளிவாகப் பெறமுடியவில்லை. எனினும் கிடைத்த ஊசல் இலக்கியங் களைக் கொண்டு அதன் காலத்தைப் பதினேழாம் நூற்றாண்டிற்குப் பின்தோன்றத் தொடங்கியதாகக் கூறலாம். பதினெட்டுப் பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் இவ் விலக்கிய வகை மிகுந்த செல்வாக்குப் பெற்றிருப்பதைக் காணலாம். ஆழ்வார்களும், நாயன்மார்களும் மக்களிடம் பக்திப் பரவசமூட்டும் இலக்கியங்களைப் பாடிச்சென்ற காலக்கட்டத்தில் கடவுளை வாழ்த்தும் உணர்வு மக்களிடை மிகுந்து காணப்பட்டது. அவர்கள் கடவுளே எல்லாமாய்

எண்ணிச் செயல்பட்டனர். அத்துடன் தொழுதனர். புராணக் கதைகளையும், கடவுள் தொடர்பான செவிவழிச் செய்தி களையும் மக்கள் பெரிதும் ஏற்றுக் கொண்டனர். இதனால் பல சிற்றிலக்கியங்கள் பக்திப் பொருண்மையைக் கொண்டு உருவெடுக்கத் தொடங்கின. அவ்வகையில் ஊசலும் ஒன்று. கோயில் வழிபாடும் விழாக்களும் அக்கால கட்டத்தில் பெருகி யதால் அவையும் ஒரு வகையில் இச்சிற்றிலக் கியங்களின் தோற்றத்திற்குக் காரணமாய் அமைந்தன. கோயில்களில் ஊஞ்சல் மண்டபங்கள் சைவம், வைணவம் என்ற பாகு பாடின்றி இருசமயக் கோயில்களிலும் அமைக்கப்பட்டிருந் தன. ஊஞ்சல் விழாவின் போதும், வசந்த காலங்களில் கொண்டாடப்படும் வேறு சில விழாக்களிலும் இப்பாடல் களைப் பாடுகின்றனர். ஊஞ்சல் விழாக்கள் இன்றும் கொண்டாடப்பட்டு வருகின்றது.

திருத்தலங்களை மையயப்டுத்தி எழுந்த தல இலக்கிய வகைகளுள் ஒன்றாக விளங்குகின்ற திருவூஞ்சல் கள் பல சுவடிகளாக இந்தியநாட்டு நூலகங்களிலே இன்றும் காணக்கூடியதாகவுள்ளன. ஊஞ்சல் இலக்கியச் சுவடிகளாக அங்கயற் கண்ணம்மை பொன்னூஞ்சல், அரங்கநாதரூசல், அரங்க நாயகன் பேரில் ஊசல், அழியா விலங்கியம்மன் ஊசல், ஆயிரவர் பேரின் ஊஞ்சல் கவிதைகள், காரநாதர் முத்தாலம்மை ஊஞ்சல் கவிதைகள், குமாரபுரி முத்தா லம்மை ஊஞ்சல், குமாரபுரி முத்தாலம்மன்ஊசல், கொங் களரூசல், சட்டைசாதர்திருப்பொன்னூஞ்சல், சடகோ யரூஞ்சல், சிவகாமி அம்மை ஊஞ்சல், சிவகிரியூஞ்சல், சிவப்பிரகாசர்ஊஞ்சல், தருமபுரம் தேனமிர்தநாயகி பொன் னூஞ்சல், தன்னை விநாயகர் ஊஞ்சல், திருவரங்கஊசல், திருவூசல், திருவூஞ்சல், நம்பெருமான் ஊஞ்சல், நாச்சியார் ஊஞ்சல், நாச்சியார் ஊசல், நந்தமாசினி பேரில் ஊஞ்சல், பச்சை நாயகி பேரில் ஊஞ்சல், பதிகம், பரசமயகௌரி

ஊஞ்சல், பெரியநாயகி அம்மன் பேரில் ஊஞ்சல், மதுரகவி யாழ்வார் ஊஞ்சல், மதுரகவியாழ்வார்ஊசல், மாணிக்குழி வாமன் புரீசர் ஊஞ்சல், மாரியம்மன்ஊசல், வள்ளியம்மன் தெய்வயானை பேரில் ஊஞ்சல் பாட்டு விஜயராகவப்பிள்ளை ஊஞ்சல், விஜராகவப் பெருமான் ஊஞ்சல், வேளார் ஊஞ்சல், வைத்தமாநிதிப் பெருமான் ஊஞ்சல், ரங்கநாயகன் ஊஞ்சல் ஆகியன விளங்குகின்றன.

இந்தியாவிலும் ஈழத்திலும் அமைந்து விளங்கு கின்ற திருத்தலங்கள் மீதும் அங்குறையும் இறைவன், இறைவி பேரில் பல திருவூஞ்சல்கள் அவ்வப் பொழுது வாழ்ந்த இந்திய, ஈழத்துப் புலர்களால் இயற்றப்பட்டுள்ளன. திருத் தலங்கள் மீது பாடப்பெற்ற திருவூஞ்சல்களாக அத்தியடி விநாயகர் ஊஞ்சல், அராலி முத்து மாரியம்மன் ஊஞ்சல், அல்வாய் விநாயகர்மீது ஊஞ்சல், அறம் வளர்த்தம்மன் ஊஞ்சல், ஆறாதார ஊஞ்சல், எயிலம்மை ஊஞ்சல், கச்சிகொண்ட பாடீசர் ஊஞ்சல், கதிரேசர் ஊஞ்சல், கந்தவன நாதரூஞ்சல், கலியாணஊஞ்சல், கலியாணபுர அங்கயற் கண்ணம்மை ஊஞ்சல், கவாணவத்தை வைரவர் ஊஞ்சல், காந்திமதி அம்மன் ஊஞ்சல், காரைக்குடி மீனாட்சி சுந்தரேசர் திருவூஞ்சல். காரைநகர் திண்ணைபுர சுந்தரேசர் திருவூஞ்சல், காலிக்கதிரேசர்திருவூஞ்சல். கும்பளாவளை விநாயகரூஞ்சல், குலசேகரம் அறம் வளர்த்த அம்மன் மீது ஊஞ்சல், கொங்கணரூஞ்சல், கொழும்பு முத்துவிநாயகர் ஊஞ்சல், சங்ககிரி சென்னகேசவப்பெருமான்ஊஞ்சல், சந்திரசேகர விநாகரூஞ்சல், சித்திவிக்கினேசுரர் ஊஞ்சல். சித்திவிநாயகரூஞ்சல், சிவகாமியம்மன் ஊஞ்சல், சிவப் பிரகாசர் ஊஞ்சல், சிவபெருமான் ஊஞ்சல், சீரங்கநாயகர்

திருவூசல், சீரங்கத்துநாயகி திருவூசல், சுப்பிரமணியபிள்ளை பேரில் கல்யாண ஊஞ்சல். சுப்பிரமணிய ஆறாதார ஊசல், திருக்கடன் மல்லைதாயற் ஊசற்பிரபதந்தம், திருக்கல்யாண ஊசல், திருக்குருகூர் வல்லியார் ஊசல். திருப்பெரும்பேற்று முருகன் திருவூசல், திருப்போரூர் முருகன் மீது ஊசல், திருவரங்க ஊசற்றிருநாமம், திருவரங்கத்து ஊசல், தில்லையாட்டி மாரியம்மன் திருவூஞ்சல், துணைவை அரசடியிற் சண்முகர் ஊஞ்சல், தென்கோவை வெள் ளெருவை விநாயகரூஞ்சல், தொண்டை மண்டல வேளாள ரூஞ்சல், நகுலேசர் ஊஞ்சல், பத்திரகாளி ஊஞ்சல், பரசமய கோளரியார் திருவூசல், பரமதேசிகர் ஊஞ்சல், பருத்தித்துறை சித்திவிநாயகர் ஊஞ்சல், பார்த்தசாரதி பெருமாள் ஊசற்றிரு நாமம், பாலையடிவாலவிக்னேசுவரர் ஊஞ்சல், பிள்ளையார் ஊசற்திருநாமம், பெரியபுல கணபதி சுவரர் ஊஞ்சல், பொன் பற்றிச செல்லியம்மை ஊசல், போக்கலை வள்ளிமணவாளர் திருவூசல், மண்டலக் கோட்டை வண்டுவனப்பெரு மாளூஞ்சல், மண்டூர் கந்தசாமி மீது லீலாசங்கர மாணவரூஞ்சல், மணவாள மாமுனி ஊசற்றிருநாமம், மயிலணி ஊஞ்சல், மயிலூர் குமரநகர் பொன்மாரியம்மன் ஊஞ்சல், மயிலூர் குமரநகர் பொன்மாரியம்மன் ஊஞ்சல், மயிலை சுப்பிரமணியர் ஊஞ்சல், மாணிக்குறிவாமணபுரிசர் ஊஞ்சல், மாதற் பிள்ளையார் ஊஞ்சல், மாரியம்மை ஊஞ்சல், மானிடரூசல், மீனாட்சி சுந்தரேசர் திருவூசல், மீனாட்சியம்மை ஊசல், முத்தாலம்மன் ஊஞ்சல், முத்துமாரியம்மை ஊஞ்சல், முருகன் ஊசல், மூளாய் சித்தி விநாயகர் ஊசல், வடிவேலர் ஊஞ்சல், பதிகம் வண்ணைநகர் ஊஞ்சல,வண்ணை வெங்கடேசப்பெருமாள் ஊஞ்சல், வதுளைக்கதிரேசர் ஊஞ்சற் பதிகம், வல்லிபுரமாயன் மீது

ஊஞ்சல், வல்லை வைத்தியேசர் ஊஞ்சல்,வள்ளிமணவாளர் திருவூசல், வன்னியர்கள் ஊஞ்சல், வீரபத்திரர் ஊஞ்சல், வேதாந்த தேசிகர் ஊஞ்சல், வேதாரேணியர் ஊஞ்சல், வேலணை மகாகணகபதிப் பிள்ளையார் மீது திருஊஞ்சல், ரங்கநாயகன் நலங்குஊசல். திருக்கேதீச்சரத் தான் ஊஞ்சல், மாவை ஊஞ்சல், மாவை ஊஞ்சற்பாக்கள், நயினை நாகபூசணி ஊஞ்சல். புலோலி பசுபதீச்சவப் பெருமான் திருவூஞ்சல், செல்வச்சந்நிதி முருகன் பெயரில் திருவூஞ்சல். சுன்னாகம் ஐயனார் ஊஞ்சல், வருத்தலவிளான் மருதடி விநாயகர் ஊஞ்சல், வீமன்காமம் காமாம்சியம்மன் ஊஞ்சல், கரம்பன் விசுவநாதசுவாமி திருவூஞ்சல், சரவணை பள்ளம்புலம் முருகமூர்த்தி திருவூஞ்சல், மாமாங்கர் ஊஞ்சல், திருக்கோவில் ஊஞ்சல், காரைதீவு பாலையடி வால விக்கினேஸ்வரர் கோயில் திருவூஞ்சல்பா, ஆரையம்பதி திருநீலகண்ட விநாயகர் ஊஞ்சல், திருக்கோணேசர் திருவூஞ்சற்பதிகம், திருதம்பலகாமம் ஸ்ரீ ஹம்சகமனாம் பிகாசமேத ஸ்ரீ ஆதிகோணநாயக சுவாமி திருவூஞ்சல், திருகோணமலை விஸ்வநாதசுவாமி (சிவன்) ஊஞ்சல், திருக்கோணமலைச் சிவன்கோயில் (சிவகாமியம்மன் ஊஞ்சல்) சிவயோகபுரம் சிவகாமசுந்தரி சமேத நடராஜப் பெருமான் திருவூஞ்சல், ஸ்ரீபத்திரகாளி அம்பாள் திருவூஞ்சல், திருகோணமலை பத்திரகாளி திருவூஞ்சல், திருக்கடலூர் படுக்கை ஸ்ரீபத்திரகாளி அம்பாள் திருவூஞ்சல். மகாமாரிதேவி திருவூஞ்சல், திருக்கோணமலை ஆலடி விநாயகர் திருஊஞ்சல், சமாதுப்பிள்ளையார் திருவூஞ்சல், மனையாவெளி வல்லப சக்தி அம்பாள் ஊஞ்சல், மலையாவெளி (இராசமலை) திருச்சிற்றம்பலப் பிள்ளையார் ஊஞ்சல், திருகோணமலை உப்புவெளி பெரியதொடுவாய்

சித்தி விநாயகர் ஊஞ்சல், நிலாவெளி சித்திவிநாயகர் ஊஞ்சல், சாம்பல்தீவு வடலியமபதிப்பிள்ளையார் திரு வூஞ்சல், சீனக்குடா ஸ்ரீசித்திவிநாயகர் திருப்பொன்னூஞ்சல், திருக்கோணமலை வில்லூன்றி கந்தசுவாமியார் திருவூஞ்சல், திருக்கோணமலை முத்துக்குமார சுவாமி திருப்பொன் னூஞ்சல், வெருகலம்பதி ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி திருவூஞ்சல், ஸ்ரீகிருஸ்ணபரமாத்மன் ஊஞ்சல் ஆகியனவும் இன்னும் பல ஊஞ்சற்பாக்களும் காணப்படுகின்றன.

ஊசல் இலக்கியங்களைப் பாடுகின்ற புலவர்கள் பெயரமைக்கின்ற முறையைக் குறித்துவரையறை எதுவும் பாட்டியல் நூல்களில் கூறப்படவில்லை. ஆனால் ஊஞ்சலைப் பாட்டியல்கள் பொன்னூஞ்சல்,மணியூஞ்சல் என்ற சொற் களால் கட்டுகின்றன. ஊஞ்சல்களுக்கு இலக்கணம் கூறும் அனைத்துப் பாட்டியல் நூல்களும் ஊசல் இலக்கியங்கள் ஆசிரியவிருத்தம் அல்லது கலித்தாழிசை, யாப்பில் அமைய வேண்டும் என்று குறிக்கின்றன. யாப்பு நிலையில் கழித்தாழிசை, ஆசிரியவிருத்தம் இரண்டையும் சுட்டுவனவும் அவற்றுள் ஒன்றை மட்டும் சுட்டுவனவும் அப்பாட்டியல் களிடையே காணப்படுகின்றன. பிள்ளைத் தமிழுக்குக் கூறுவன போன்று இங்கும் சுற்றத்தளவு கிளையளவு என்பன பாட்டியல் பகுதிகளில் சுட்டப்படுகின்றன.

ஊஞ்சல் இலக்கியத்தின் ஒவ்வொரு பாடலும் "ஆடீர் ஊசல்" என்றோ "ஆடாமோ ஊசல்" என்றோ முடியவேண்டுமென்று பாட்டியல் கள் வரையறை தருகின்றன.இவ்விரண்டையும் சுட்டும் அனைத்துப் பாட்டியல்களும் "ஆடீர்" என்பதை முன்னும் ஆடாமோ என்பதைப் பின்னும் அமைந்துள்ளன. இவ்வமைப்பு முறை இந்த இரண்டு சொற்களில் "ஆடீர்" என்பதற்கு முதன்மை

கொடுத்தனரோ என்று எண்ண இடமளிக்கின்றது. கிடைக் கின்ற எல்லா ஊசல் இலக்கியங்களும் "ஆடீர்" என்றே முடிகின்றன. ஆடோமோ என்னும் முடிவில் எந்த ஓர் ஊசல் இலக்கியமும் முடிவு பெற்றதாகத் தெரியவில்லை.

ஊஞ்சல் இலக்கியங்கள் பாட்டியல் நூல்கள் கூறும் மங்கலப் பொருத்தம் முதல் கணப்பொருத்தம் வரையிலான பத்துப் பொருத்தங்களோடும் பெரும்பாலும் அமைந்து வருவதைக் காணமுடிகிறது. சில இலக்கியங்களில் மட்டும் கணப்பொருத்தம் அமையவில்லை. ஊஞ்சல் இலக்கியங்கள் பத்துப்பாடல்களைக் கொண்டதாக அமையக் காண்கிறோம். ஊஞ்சலுக்கான பாடல் வரையறையைப்பற்றி, பெரும் பாலான பாட்டியல் நூல்கள் இலக்கணம் கூறவில்லை. இந்த வரையறையின் படி பெரும்பாலான ஊஞ்சல் இலக்கியங்கள் அமைய சில இலக்கியங்கள் பத்துப்பாடல்களுக்கு மிகுந்தும் காணக்கிடக்கின்றன. ஊஞ்சல் இலக்கியங்கள் பெரும்பான் மையும் பாட்டுடைத் தலைவரின் பெயரினையே நூற் பெயராகக் கொண்டிருக்கின்றன. ஊஞ்சல் ஊசல், ஊசல் பாட்டு, ஊஞ்சல்பாட்டு. ஊஞ்சல்பாமாலை, ஊசல் பாமாலை, ஊஞ்சல்கவிதை, ஊஞ்சல்பதிகம், ஊஞ்சல் பதிகம், ஊசல்பிரபந்தம், ஊஞ்சல்பிரபந்தம், என்று அவற்றின் பெயரமைப்பின் இறுதித் தொடர்கள் விளங்கு கின்றன. இன்னும் திருவூசல் கல்யாண ஊசல், திருக் கல்யாண ஊசல், நலுங்கு ஊசல் எனவும் அவற்றின் பெயர்கள் அமைகின்றன. பாட்டுடைத்தலைவரின் பெயரைச் சுட்டி அத்துடன் மீது ஊஞ்சல் என அமைகின்ற நிலையும் இந்த இலக்கிய வகையினுள் காணமுடிகின்றது. அவ் வகையில் முருகனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட

ஊசல் முருகன் மீது ஊசல் என்பது போன்று அமையும். அனந்த கிருட்டிண ஐயங்கார் என்பவர் தமது நூலுக்கு மணவாளமாமுனி ஊசற்றிருநாமம் என்று பெயரமைக் கின்றார். ஆனால் இப்படி -ஊசற்றிருநாமம் என்று வேறு ஊஞ்சல் இலக்கியம் பெயர் பெற்றதாகத் தெரியவில்லை.

ஊஞ்சல் இலக்கியங்கள் பத்துப்பாடல்களைக் கொண்டதாக இருக்க வேண்டும் என்பர். அவ்வரை யறைக்குப் பெரும்பாலான இலக்கியங்கள் உட்பட்டிருக் கின்றன. சிலவற்றில் மிகுந்தும் காணப்படுகின்றன. கிடைக் கின்ற ஊஞ்சல் இலக்கியங்களைக் கொண்டு நோக்கும் போது பத்துப்பாடல்கள் சிற்றெல்லை யாகவும், இருபத் தெட்டு பாட்டில் பேரெல்லையாகவும் காணப் படுகின்றது. பதினொன்று. பன்னிரெண்டு பாடல்களைக் கொண்ட ஊசல் எண்ணிக்கையில் பத்துப் பாடல்களைக் கொண்ட இலக்கியங் களுக்கு அடுத்த நிலையில் அமைகின்றது. பாடல் எண்ணிக்கை என்பது காப்புச் செய்யுளையும் உட்படுத்தியே கணக்கிடப்படுகின்றது. ஆனால் ஆசிரியர் சிலர் அவற்றை நீக்கிப் பாடலெண்ணிக் கையைக் கணக்கில் கொண்டு பாடுகின்றனர். அதனால் காப்பாக அவையடக் கமாக அமையும் பாடல்கள் மிகுந்து காணப்படுகின்றன. பத்துப் பாடல்களில் ஊஞ்சல் இலக்கியங்களை அமைத் தமைக்கும் காரணம் உண்டு. இறைவிழா போன்றவற்றில் தொடர்ந்து பாடினால் கால நீடிப்பு ஏற்பட்டு பின்வரும் நிகழ்ச்சிகளுக்குத் தடையேற்படும். அவை கருதியும் பொருள் நுகர்வு, புலப்பாட்டுச் சுருக்கம் போன்றன கொண்டும் அவை பத்துப பாடல்களுக்குள் அமைக்கப்பட்டிருக்கலாம். ஊசல் இலக் கியத்தின் முன்னோடியாக இருக்கும் திருவாசகத்தின் திருப்

பொன்னூசல் பகுதியும் பிள்ளைத் தமிழ் இலக்கியங்களின் ஊசல் பருவங்களும் பத்துப்பாடல்கள் கொண்டு அமைக்கப்பட்டிருந்தன. எனவே அவற்றை அடியொற்றி இலக்கியம் படைப்படபோரும் அந்தப் பாடல்கள் எண்ணிக் கையைப் பின்பற்றி தம் இலக்கியப படைப்புக்களை உருவாக்குகின்றனர். கருத்துப்போக்கும், கற்பனை ஓட்டமும் பத்திபெருக்கும் பாடல்கள் மிகுந்தெளக் காரணம் ஆகலாம். நூலின் தொடக்கம் காப்பாக அமை கின்றது. ஒரு காப்புப்பாடல் அமைவது பெரும்பான்மை சிறுபான்மை இரண்டு காப்புப்பாடல்களும் அமைகின்றன. செங்குந்தர் பிரபந்தத் திரட்டில் அமைந்துள்ள ஊசல் என்னும் சிற்றிலக்கியம் இரண்டு பாடல்களைக் காப்பாகக் கொண்டு அமைந் துள்ளது. தனிமனிதரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு நிகழும் ஊசல் சிற்றிலங்கியங்கள் விநாயகரைக் காப்புக் கடவுளாகத் தொழுகின்றன. சில இலக்கியங்கள் அவ்வாசிரியரின் விருப்பத்திற்கு இணைய வேறு கடவுளை கடவுளரை காப்பில் போற்றுகின்றன. புலவோர் சிலர் தம்மையும், தாம்பாடுவோர் பாடல் இவற்றைக் குறித்த செய்திகளையும் நூலின் காப்பில் பாடுகின்றனர். சில நூல்கள் காப்புப்பாடலின்றி தொடக்கமே நூலாகச் செயல் கின்றது. நூல் பாடல்கள் பெரும் பான்மையும் ஒத்த நோக்குடையனவாகவே காணப்படுகின்றன.

ஊசல் இலக்கியத்தின் பாடல்கள் தமது ஈற்றடியில் ஆடீர் ஊசல் என்ற முடியைத்தாங்கி நிற்கின்றன. இப்படி முன்னிலைப்பன்மையாக ஆடீர் ஊசல் என அமைவதுடன் ஆடுக பொன்னூசல் என வியங்கோளாயும் ஆடூசல்" என வினைத்தொகையாயும் அமைகின்ற

நிலையினைக் காண் கின்றோம். ஊசல்இலக்கியங்களின் இறுதிப்பாடல் வாழ்த்துப் பாடலாக (வாழி) அமைகின்றது. ஒரு பாடலன்றி அவ்வகையில் இரண்டு பாடல்களையும் அமைப்பதை ஒரே வழி காண முடிகின்றது. அந்த ஊஞ்சலில் பாடப்படுவோன் அவன் முன்னோன் , சுற்றம்இதொண்டர் போன்ற பலரையும் வாழ்த்தி இறுதியில் உலகும் இந்த ஊஞ்சலும் வாழுமாறு அப்பாடல் வாழ்த்தி முடிக்கின்றது. சிலவற்றில் வாழி என்று குறிக்கப்பட்டும் சிலவற்றில் குறிக்கப்படாமலும் அமை கின்றன. இவற்றை ஊசலிலக் கியத்தின் உறுப்பு எனக்கொள் வதில் தவறில்லை. இறைவனோ மக்களோ இவற்றின் தலை மாந்தர்களாக அமைகின்றனர். இறைநிலையில் இறைவன் இறைவி இருவரும் தலைமை ஏற்கின்றன. மக்களுள் அரசர் உரைத் தலைவர் அல்லது புலவரால் விருப்பப்படுவோர் தலைமை பெறுகின்றனர்.

மக்களுக்கும் கடவுளர்களுக்கும் ஊஞ்சல் பாடல்கள் பாடப்பட்டாலும் இறைவன் -இறைவியர் பற்றிய ஊஞ்சல் பாடல்களே மிகுதியாகக் காணப்படுகின்றன. மக்கள் தொடர்பு ஊஞ்சல் பாடல்கள் மிகுதியும் திருமண ஊஞ்சலாய் அமைகின்றன. இவை லாலிப் பாட்டு எனவும் அழைக்கப் படுவதுண்டு கோவில் நடைபெறும் டோலோற்சவம் போன்ற விழாக்களின் போது பக்திநிலை ஊஞ்சல் பாடல்கள் பாடப்படுகின்றன. இவை பெரும்பான்மையும் பக்தி இலக்கியங்களின் தொடர்களை ஆங்காங்கே கையாளு கின்றன. வள்ளி முருகன் போன்ற திருமணங்களை ஒப்பிட்டுப் பிற்காலத்தில் பாடப்பட்ட பாடல்களும் லாலிப்பாட்டு என்று

அழைக்கப்படுகின்றன. ஆனால் அவை ஊஞ்சல் அமைப் பின்னின்றும் மாறுபடுகின்றன. சிலர் இறைவனைப் பாடுவதை யும் லாலி என்று அழைக்கப்படுகின்றனர். இப்பாடல்கள் பொதுவாக மக்களுக்கு அறுவுரை கூறும் வகையில் அமைந்தவை இறைவனும் இறைவியும் தலை சிறந்த கலைப்பிரியர்கள் கலைவடிவமாகவே பல அன்பர்களுக்கு காட்சி யளிக்கின்றனர். இறைவனும் இறைவியும் கலையின் உன்னத மான இலக்காக விளங்குகின்றனர். பல்வேறு வகையான இசைப் பாடல்களிலே ஊஞ்சல் பாவும் ஒருவகையே ஆகும். இவ்வூஞ்சற் பாக்கள் பொது மக்களது இசை மரபினையடிப் படையாகக் கொண்டதுடன் பலரையும் தன்பால் ஈர்க்கவல்லது. இறைவனைப் பற்றிய ஊஞ்சற் பாக்கள் பலரையும் ஈர்த்து இறைவன் பாற்படுத்தி ஈடேற்றும் பாங்கில் அமைந்துள்ளன. குழந்தைகள், சிறுவர்கள் மணமக்கள் அரசர் முதலியோரை ஊஞ்சலில் வைத்து ஊஞ்சலாட்டிப் பாடி இன்புறச் செய்தல் போலப் பொதுவாக இறைவனுக்கும் இறைவிக்கும் நைமித்திய விழாமுடிவிலே குறிப்பாகத் திருக்கல்யாணத் திருவிழாவின் போது ஊஞ்சற்திருவிழா (டோலோற்சவம்) நடாத்துதல் வழக்க மாகும். ஈழத்திலுள் திருக்கோயில்களில் நிகழும் நைமித்திய கிரியைகளான கும்பாபரிசேஷக தினம் வருடாந்த மகோற் சவத்தின் கொடியிறக்கத்திருவிழா, திருக்கல்யாண உற்சவம் (பூங்காவனத்திருவிழா) திருவெம்பாவையின் இறுதிநாளான திருவாதிரை உற்சவம் ஆகிய தினங்களில் திருவூஞ்சல் பாடல்களைப்பாடி இறைவனுக்கு அர்ப்பணித்து மகிழ்விக் கின்ற வழக்கம் இன்றுவரை நடைமுறையில் இருந்து வருகின்றது.

தொகுத்து நோக்கின் திருக்கோயில்களை மையப்படுத்தி தல இலக்கியங்களுள் ஒன்றாக விளங்குகின்ற திருவூஞ்சல் பாடல்களைப்பாடுகின்ற மரபு இந்தியா, இலங்கை நாடுகளிலேயுள்ள இந்துக்கோயில்களிலே இன்று வரை காணப்படுகின்றன. மேலும் இக்கட்டுரையில் ஊஞ்சல், சொல்லாய்வு, ஊஞ்சலும் ஊசலும், ஊஞ்சல் ஆடும் பண்பு, ஊஞ்சல் வகைதொகை, பகுப்பாய்வு, இலக்கியத்தில் ஊஞ்சல், ஊசல் சிற்றிலக்கிய உருவாக்கமும் காலமும் இந்தியாவில் சுவடிநிலையில் உள்ள திருவூஞ்சல்கள் இலங்கை, இந்தியா, நாட்டுத்திருக்கோயில்கள் மீது பாடப் பெற்ற திருவூஞ்சல் ஆகிய இன்னோரன்ன விடயங்கள் நன்கு எடுத்து ஆராயப்படுகின்றன.

## உசாத்துணை நூல்கள்:


01. சதாசிவம் ஆ. (தொகுப்பாசிரியர்) **ஈழத்துத்தமிழ் கவிதைக் களஞ்சியம்** கொழும்பு 1966

02. அழகப்பரா சு.த (பதிப்பாசிரியர்)**ஊஞ்சல் இலக்கியம்** உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.சென்னை 1983

03. **இலங்கை திருநாட்டின் இந்துக்கோயில்கள்** இந்து சமயத் திணைக்களம் பிரதேச அபிவிருத்தி அமைச்சு வெளியீடு) கொழும்பு 1984

04. தில்லைநாதப்புலவர் ஆ. (ஆசிரியர்) செந்திநாதன் கனகசிவநேசபிள்ளை தில்லை.(தொகுப்பாசிரியர்கள்) **தெய்வத்தமிழ்ப் பிரபந்தங்கள்.**யாழ் இலக்கிய வட்டம் யாழ்ப்பாணம்.1977

05. கந்தையா **வீ. சீ. மட்டக்களப்பு சைவக்கோயில்கள்** இந்து சமயத் திணைக்களம் பிரதேச அபிவிருத்தி அமைச்சு கொழும்பு 1983

06. வடிவேல் **இ. திருக்கோணமலை மாவட்டத் திருத்தலங்கள்** இந்து சமயத்திணைக்களம்.கொழும்பு.1981

ஸ்ரீ பரமேஸ்வரன் துணை

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக**

# அருள்மிகு
# பார்வதியம்பாள் ஸமேத பரமேஸ்வரன்
# திருவூஞ்சல்

## காப்பு

பொன்னகராம் யாழ்ப்பாணப் பல்க லையின்
புகழ்பூத்த கழகத்தின் திலக மாகப்
பொன்ராம நாதவள்ளல் பொதித்த கோயில்
பொன்னைய னாம்பரமேஸ் வரனும் தேவி
பொன்னம்மை பார்வதியும் எழுந் தருளிப்
பூந்தமிழின் திருவூஞ்சல் பொலிந்தே ஆட
வன்னமருப் பொசித்துகவி எழுதித் தந்த
வாரணனின் செஞ்சரணம் காப்ப தாமே!

## நூல்

சீர்மலியும் சுருதிநாற் கால்க ளாகச்
சிவாகமமே நடுவயிர விட்ட மாகப்
பேர்மலியும் கலைஞானம் வடங்களாகப்
பிரணவஓங் காரமதே பீட மாகத்
தார்மலியும் தண்டமிழின் ஊஞ்சல் வைகித்
தமிழீழ யாழ்ப்பாணத் திருநெல் வேலிப்
பார்போற்றும் பல்கலைக் கழகம் மேவும்
பராபர மேஸ்வரனே ஆடீர் ஊஞ்சல் 1

அகமதிலே பக்திநாற் கால்நி றுத்தி
ஐந்துபுலன் விட்டமதை ஒருங்கே கூட்டிச்
செகமதிலே நாற்கரண வடங்கள் மாட்டிச்
செய்யதிரு வருளென்ற பலகை தேக்கிப்
புகலரிய சீவனவன் முத்தி யூஞ்சல்
பூரித்து ஆடவருள் செய்யும் தேவா!
இகமதில்யாழ் பல்கலைக் கழகம் மேவும்
இறைவபர மேஸ்வரனே ஆடீர் ஊஞ்சல் 2

நதிமதியும் படவரவும் சடையு மாட
நயன நுதல் விழியருளும் முறுவ லாட
அதிபதியாம் அரன்சுரமான் மழுவு மாட
அம்பிகைபார் வதிதேவி தழுவி யாடச்
சதிபதியாய்ப் பார்வதியும் பரமேஸ் வரன்
சகலகலை வளர்த்தோங்கும் அருளும் ஆடப்
பதிகலையாழ் பல்கலைக் கழகம் மேவும்
புராரிபர மேஸ்வரனே ஆடீர் ஊஞ்சல் 3

நூலாட நுதலாட நீறும் ஆட
நுண்கலைகள் ஆட்டம ருகமு மாடச்
சேலாடும் கண்ணிபார் வதியும் ஆடச்
செழும்புலியின் உரியாடச் சதங்கை ஆட
மாலாட மாதங்க முகத்த னாட
மயிலவனும் வள்ளிகுஞ் சரியு மாட
மேலான பல்கலைக் கழகம் மேவும்
மஹாபர மேஸ்வரனே ஆடீர் ஊஞ்சல் 4

குழையாடத் தோடாடக் கொன்றை யாடக்
கோதைபார் வதியம்மை கொஞ்சி யாட
எழிலான மணிநீல கண்ட மாட
எம்பெருமா னணியக்க மாலை யாட

முழவாட நந்திமத தளமு மாட
முகுந்தனவன் குழலாட வேத மாட
அழகான பல்கலைக் கழகம் மேவும்
ஆதிபர மேஸ்வரனே ஆடீர் ஊஞ்சல் 5

அயனாட அரியாட அண்ட மாட
அகிலசரா சரமனைத்தும் அருளால் ஆடக்
கயலாரும் விழியரம்பை மாத ராடக்
கலையாடக் கழலாடக் கருணை யாட
மயனாட மதனாட ரதியு மாட
மனமுருகி அடியரவர் விழிநீ ராட
உயர்யாழின் பல்கைலக் கழகம் மேவும்
உமாபர மேஸ்வரனே ஆடீர் ஊஞ்சல் 6

சனகசநா தியர்க்கருளும் குருவாய் வந்தாய்!
சந்நிதியாம் தென்திசைபார்த் தமர்ந்தாய் தேவா!
கனகமழை சொரிவதைப் போல் கலைகள் கல்வி!
கவின்பெறவே மௌனகுரு உபதே சித்தாய்!
பனகமணி மார்பழகா பல்கலையில்
பக்குவஞ்சேர் ஞானநெறி ஊட்டி வைத்தாய்!
தினகரன்போல் பல்கலையின் கழகம் மேவும்
தெய்வபர மேஸ்வரனே ஆடீர் ஊஞ்சல் 7

பொன்ராம நாதவள்ளல் உனைப்பூ ஜிக்கப்
பொலிந்திடவே செந்தமிழும் சைவம் சீலம்
நன்றாக வளர்த்திடவே ஆசி தந்தாய்!
நற்கலையும் கல்விவளம் பெருகச் செய்தாய்!

மன்றாடும் ஆடலொடு பாட லெல்லாம்
மாண்புறவே பக்தியோடு சேர்த்து வைத்தாய்!
இன்யாழின் பல்கலைக் கழகம் மேவும்
ஈசபர மேஸ்வரனே ஆடீர் ஊஞ்சல் 8

பிட்டுண்டு மண்சுமந்த களைப்பும் தீரப்
பிரம்படி பட்ட அந்தக் தழும்பும் ஆறக்
கட்டுண்ட விறகுவிற்ற நோவும் மாறப்
கண்ணப்பன் கால்பட்ட கறையும் போக
வெட்டுண்ட கறிசுவைத்த விசனம் ஏக
வெங்கோபச் சுந்தரர்சொற் பித்தம் நீங்க
வட்டன்ன பல்கலைக் கழகம் மேவும்
வடிவபர மேஸ்வரனே ஆடீர் ஊஞ்சல் 9

அன்றொருநாள் இராவணேசன் மலையைத் தூக்க
அழுத்தியே பதவிரலால் அகந்தை தீர்த்தாய்!
பன்றியதன் குட்டிகட்குப் பரிந்தே வந்து
பால்கொடுத்துத் தாய்மையதன் பெருமை காத்தாய்!
நன்றிசொலும் தருமிக்கே கவிதை தந்தாய்!
நக்கீரன் அஞ்சவிழி காட்டி நின்றாய்!
மன்றுதிகழ் பல்கலைக் கழகம் மேவும்
மகிழுபர மேஸ்வரனே ஆடீர் ஊஞ்சல் 10

திங்கள்எழில் முகத்தழகி செவ்வாய் பூக்கும்
தேவியவள் பார்வதியின் அன்பு தன்னை
பொங்கிவரும் காதலினால் வியாளன் பூண்டு
பிச்சையும் கேட்கவெள்ளி மலையும் விட்டே

பங்கஜப்பார் வதியுளத்தில் ஆசனித்தாய்
பல்கோடி ஞாயிறுவின் தேசு ரூபா
மங்களயாழ் பல்கலைக் கழகம் மேவும்
மகிபபர மேஸ்வரனே ஆடீர் ஊஞ்சல் 11

அத்துவிதங் கடந்தவரே ஆடீர்ஊஞ்சல்
அன்பருள்ளம் உறைபவரே ஆடீர்ஊஞ்சல்
வித்தகத்தின் தத்துவமே ஆடீர்ஊஞ்சல்
விரிகலையின் திருவுருவே ஆடீர்ஊஞ்சல்
சத்துசித்தா னந்தமயா ஆடீர்ஞ்சல்
சதாசிவப் பரம்பொருளே ஆடீர்ஊஞ்சல்
சத்தியம்சி வம்சுந்தரா ஆடீர்ஊஞ்சல்
முத்தியருள் முகிழ்த்தவரே ஆடீர்ஊஞ்சல் 12

## வாழி

மாமறைவே தியர்வாழி வானோர் வாழி!
மன்னிடுகோ வினம்வாழி மாரி வாழி!
கோமகனின் நல்லாசுக் கோலும் வாழி!
கோதையரின் கற்புநெறி ஞானம் வாழி!
பூமருவு சைவமதம் பொலிந்து வாழி!
பூந்தமிழும் கல்விகலை மிளிர்ந்தே வாழி!
பாமலரும் பல்கலைக் கழகம் வாழி!
பார்வதியும் பரமேசர் வாழி! வாழி!!

## எச்சரிக்கை

ஐந்தொழில் சிந்தும்ஆடல் அழகாஎச்ச ரிக்கை
ஐம்பூதங்கள் வந்தேபணி இறைவாஎச்ச ரிக்கை
பந்தார்பகப் பார்வதிமகிழ் பதியேஎச்ச ரிக்கை
பஞ்சாக்ஷரப் பரமேஸ்வரா பரனே எச்சரிக்கை. 1

சேர்பொன்ராம நாதவள்ளல் உளத்தோய்எச்ச ரிக்கை
செழுங்கல்வியுஞ் சேர்கலைக்கழ கத்தோய்
எச்சரிக்கை
சீர்தந்திடும் யாழ்பல்கலைக் கழகாஎச்ச ரிக்கை
சிவபாதமே தருவாய்கலை நடேசா எச்சரிக்கை. 2

விடைவானத் தமரும்வடி வுடையாய்எச்ச ரிக்கை
விடகண்டனே நடனந்தனைப் புரிவோய் எச்சரிக்கை
படைமான்மழு கரமேந்திடும் பரனேஎச்ச ரிக்கை
பரைபார்வதி தழுவும்பர மேசா எச்சரிக்கை. 3

இசையாழ்நகர் கலைவாழ்கோயில் அமர்வோய்எச்ச ரிக்கை
இனியார்தொழ வரமேயருள் இறைவா எச்சரிக்கை
திசைபோற்றிசெய் திகழ்ஞானத்தின் குருவே எச்சரிக்கை
திருத்தாமரைப் பதமேதரு வாயே எச்சரிக்கை 4

## பராக்கு

ஆனந்தத் தாண்டவனே நடேசா பராக்கு
ஆதிபார் வதிதேவி நாதா பராக்கு
ஞானந்த ரும்மௌன குருவே பராக்கு
ஞாலயாழ் பல்கலைக்கழகா பராக்கு 1

ஆயகலை கல்வியருள் குருவே பராக்கு
அஞ்ஞான இருள்நீக்கும் ஆசான் பராக்கு
தூயதமிழ்த் திருமுறைகள் நுகர்வோய் பராக்கு
திகழுபர மேஸ்வரனே தேவா பராக்கு 2

வேதாக மப்பொருளே நாதா பராக்கு
வேதாந்த தேசிகனே தேவா பராக்கு
நாதாந்த ரூபமயா நடனேப ராக்கு
நல்லருளைப் பொழியுபர பரமேசா பராக்கு 3

பொன்ராம நாதன்தொழும் ஈசா பராக்கு
பொன்னம் பலவாணா நாதா பராக்கு
மன்றாடும் நடேசனே குருவே பராக்கு
மாநகர்யாழ் பல்கலைக் கழகா பராக்கு 4

## லாலி

பார்பதி பரமேசர்க்கு லாலி சுப லாலி
பல்கலைக் கலைவாணிக்கு லாலி சுப லாலி
கூர்மதி தருபவர்க்கு லாலி சுப லாலி
கொஞ்சுதமிழ் அருள்பவர்க்கு லாலி சுப லாலி
சீர்மலியும் கலைகளுக்கு லாலி சுப லாலி
செந்தமிழின் ஏழிசைக்கும் லாலி சுப லாலி
பார்தனில்யாழ் பல்கலைக்கு லாலி சுப லாலி
பரமேஸ்வ ரன்உமைக்கு லாலி சுப லாலி 1

வாரண முகத்தருக்கும் லாலி சுப லாலி
வள்ளிகுஞ்ச ரிநாதர்க்கும் லாலி சுப லாலி
ஆரணியாம் பார்வதிக்கும் லாலி சுப லாலி
அண்ணல்பர மேசருக்கும் லாலி சுப லாலி
சூலமேந்தும் பைரவர்க்கும் லாலி சுப லாலி
சுந்தரிஸ ரஸ்வதிக்கும் லாலி சுப லாலி
நீலவண்ணன் லக்குமிக்கும் லாலி சுப லாலி
நிறைசண்டேஸ் வரருக்கும் லாலி சுப லாலி 2

# மங்களம்

**இராகம்: சுருட்டி** **தாளம்: ஆதி**

**பல்லவி**

பார்வதி பரமேசர்க்கு ஜெமங்களம் -யாழ்
பல்கலைக் கழகத்திற்கும் சுபமங்களம்

**அனுபல்லவி**

சூர்மதி தரும் வாணிக்கும்
கொஞ்சுதமி ழின் அன்னைக்கும்
பாரில்ஞான குருவுக்கும்
பல்கலை வித்தகர்க்கும் (பா)

**சரணம்**

பொன்ராம நாதவள்ளல்
பூஜித்த தெய்வத்திற்கும்
பொன்னான கோயிலுக்கும்
பூந்தமிழ்ப் பூசுரர்க்கும்
என்னாளும் கல்விதரும்
ஏந்தலாம் ஆசானுக்கும்
மன்னாளும் மாணவர்க்கும்
மஹா தேவன் பக்தருக்கும் (பா)

சுபம்

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக**
**அருள்மிகு பார்வதியம்பாள்ஸமேத பரமேஸ்வரன்**
**திருவூஞ்சல்**
**முற்றும்**


உ

சிவமயம்

# "பரமேஸ்வரமெனப் பணிவோம்"

திருவள ரறிவின் திருந்தொளி நிரம்புந்
திறலினன் செயலினன் எனவே
தருபுகழ் ராம நாதனின் தவத்தால்
தண்தமிழ் ஆங்கிலம் முதலாய்
வருமொழி பலவும் சிவநெறி மரபும்
வழிவழி நிலவியே மலரப்
பரவிடும் அருளால் திசைமுழு தாளும்
பரமேஸ்வரமெனப் பணிவோம்

**இயற்றியவர்:**
**வித்துவான். க. வேந்தனார்**



## "ஸ்ரீபார்பதீ ஸமேத பரமேஸ்வர"

*ராகம்: கல்யாணி* *தாளம்: ஆதி*

### பல்லவி

ஸ்ரீபார்வதீ ஸமேத பரமேஸ்வர பக்தபாலக பாஹி மாம் (ஸ்ரீ)
4

### அனுபல்லவி

பவஸிந்து தாரக பங்கஜாஸநபூஜித பாத பத்ம பரமபதே (ஸ்ரீ)
4

### சரணம்

1. பாமரஜநவந்தித பண்டிதநுத பத்மநாப ஸோதரீச பக்தார்த்திஹர
3 4 3 4
புரா ஸ்ரீராமநாதர்க்ஷி நிர்மிதாலய நிவாஸ நிர்மலரூப
2
வீணாகாநபுர சாலிவாடீக்ஷேத்ர விச்வவித்யாலயப்ரதீபபரம்ஜ்யோதே
3 3 3
பார்வதீப்ரிய பராத்பர பரமதயாலோ பக்தசந்தந பரமேச (ஸ்ரீ)

2 ஸுராஸுரஸேவித ஸுந்தரேச ஸுகுணாலங்க்ருத சித்ஸபேச
3 3 4
சராசராத்மக ஸச்சிதாநந்தரூப ஸந்மார்க தர்சக ஸர்வேச்வர
3 3 3 3
ஸங்கீதப்ப்ரிய ஸகலவேதாகமஸார சிந்மயாநந்த சிந்தாமணே
3 3 3 3
ஸ்ரீசாலிவாடீபுர நிவாஸ ஸர்வலோகஹிதகரஸத்யரூப
ஸதாசிவ(ஸ்ரீ)
3

3. ஆநந்தநடநபாத அகிலப்ரபஞ்ச மத்யஸ்த சிதம்பரேச தேஜோமய
3 3 2 4 2 3
தத்தித்தோம் ததிங்கிணதோம் ததாங்கதோமிதி
தாலஸஹித தாண்டவப்ரிய
3
பரத்யாகசீல பரமானந்ததாயக பக்தஸஹாய பக்திவச
3 3 3 4 4
தக்ஷிணதிங்முக தர்சிதஸநகாதிதத்வ தயாம் குரு ஸதய (ஸ்ரீ)
3 3 2 3 3 3 3

4 ஸர்வலோகாநுக்ரஹ பஞ்சக்ருத்யப்ரிய பாகார்தபார்வதீரமண
3 4 3 4
சராசரஸந்தாநவ்ருத்திகரஸந்மங்கலவிவாஹபரவிபோ
3 4 3 4

ஸதாலங்க்ருதடோலா ஸுகாஸக்த ஸுகவாரித ஸதாஸுமுக
3 2 2 3 3 2

ஸத்பதம் தர்சய ஸர்வமங்கலேச ஸகலாத்மஸத்குரோ (ஸ்ரீ)
2 3 3 3 3

**வி.சிவசாமி**

இக்கீர்த்தனைக்கான ராக, தாளத்தினை அமைத்தும் சில அரிய ஆலோசனைகளை வழங்கியும் உதவிய இயலிசை வாரிதி பிரம்மஸ்ரீ ந.வீரமணி ஐயர் அவர்களுக்கும் ஆக்கியோனின் உளங் கனிந்த நன்றி உரித்தாகுக.



உ
சிவமயம்

யாழ்ப்பாணம் - இணுவில்

மகாவித்துவான்

# மா. த். ந். வீரமணி ஐயர்



# இயலிசை வாரிதி
# பிரம்மஸ்ரீ ந. வீரமணிஐயர் அவர்களின் வாழ்வும் பணியும்

**கர்ணிகா பாஸ்கரக்குருக்கள்,**
*B.A. (HONS), M.A*

உலகத்தமிழர் அறிந்த உன்னதக் கலைஞர் களில் கவிமாமணி வீரமணி ஐயா அவர்களும் ஒருவர் முத்தமிழ்களான இயல், இசை, நாடகம் முத்திறனும் ஒருங்கே அமையப்பெற்ற ஒப்புயர்வற்ற கலைஞராகவும் ஆயிரக்கணக்கான இசை நடன ஆசிரியர்களை இம் மண்ணுக்காக உருவாக்கித்தந்த பெருமைக்குரியவராகவும் விளங்கிய ஐயா அவர்கள், யாழ்ப்பாணம் இணுவையம் பதியில் 1931 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 15 ஆம் திகதி நடராஜஐயர் சுந்தராம்பாளுக்கு இரண்டாவது மகளாக பிறந்தார். இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் ஆலயத்தின் அருகே அமைந்ததே ஐயாவின் பிறப்பிடம் - வாழ்விடம். பரம்பரைக் கலையுணர்வால், இவரும் கருவிவேயே கலையாற்றல் பெற்றவராக விளங்கிய ஐயா அவர்களை "சப்தரிஷி" எனவும் அழைப்பார்.

சிறுவயதிலேயே பெற்றோரை இழந்தாலும் தமையனார் கந்தசாமி ஐயரின் அரவணைப்பில் வளர்ந்து, தனது ஆரம்பக் கல்வியை இணுவில் அம்பிகை வித்தியாலத் திலும் பின்னர் மானிப்பாய் இந்துக்கல்லூரியிலும் கற்று வந்தார். படிக்கும் போது அனைத்து துறைகளிலும் சிறந்து விளங்குவதைக் கண்ட தமையனார் உயர்படிப்பிற் காக இந்தியாவிற்கு அனுப்பிவைத்தார். ஒரு விஞ்ஞானப் பட்டதாரி யாக வரும் நோக்குடன் இந்தியா சென்ற ஐயா அவர்களின் மனம் கலையார்வத்தையே நாடிநின்றது. கலைவாணியின் திருவருளும் கைகூடவே அவரது கலைப் பயணம் ஆரம்பமாகியது. உலகபுகழ் பெற்ற சென்னை அடையாறு

கலாஷேத்திரா நாட்டியக்கல்லூரியில் இணைந்து ஸ்ரீமதி ருக்மணி அருண்டேலை தனது பரதகலா குருவாக அடைந்து பரதக்கலையையும். இசைமேதை எம். டி. இராமநாதனை சங்கீத கலாகுரவாக பெற்று இசையையும் பயின்று அவ்வாறே இசை வல்லாளரும் பிரபல வாக்கேயகாரருமாகிய பாபநாசம் சிவனை தனது ஸாகித்ய கலாகுரு வாகவும் ஏற்றுக் கொண்டார். இவ்வாறு இசை நடனம் இரு துறைகளிலும் தேர்ச்சி பெற்று இரண்டிலும் வித்துவான் பட்டத்தை சுவீகரித்துக்கொண்ட பெருமைக்குரியவர் கலை மாணவனாய தளிர்விட்டு, எண்ணற்ற கலைஞர்களை ஒருவாக்கிய ஆசானாய் கலையுலகில் ஒளிர்ந்த ஐயாவின் கலைப்பணிகள் உன்னதமானவை.

## கலைப்பணி

கலாஷேத்திரா நாட்டியக் கல்லூரியில் ஐயா கற்கும் காலத்தில், அவரது கவித்துவ ஆற்றலால் வியப்படைந்த எச். எம். வி நிறுவனத்தினர் அவரை சாகித்யகர்த்தாவாக நியமித்தனர். கர்நாடக இசையுலகில் சாகித்ய கர்த்தாக்கள் எனக்குறிப்பிடப்படுபவர்களுள் இவர் கவியாக மிளிர்கின்றார் என்பதனை சிறப்பித்து இவருக்கு "புவிகுவிகவிரவி" என்ற பாராட்டு நாமமும் உண்டு. தனது 25 ஆவது வயதில் திருமயிலை கபாலீஸ்வரரை பாட்டுடைத்தலைவனாகவும் தேவி கற்பகாம்பாளை தலைவியாகவும் கொண்டு பாடிய திரு மயிலைக்குறவஞ்சி இசையுலகத்திற்கே இவரை அடையாளம் காட்டியது. அதில் இடம் பெற்ற முதலாவது பாடலான

*"கற்பக வல்லி நின் பொற்பதங்கள் பிடித்தேன்*
*நற்கதி அருள்வாயம்மா....."*

எனும் ராகமாலிகை ஐயாவை இன்றும் எமக்கு நினைவூட்டும் புகழ்பெற்ற பாடலாக விளங்குகிறது. இதன் பெருமையையுணர்ந்த கபாலீஸ்வரர் ஆலயத்தினர், அதனை ஆலய வாசலில் கருங்கல்லில் பொறிப்பித்ததுடன் அதன் கீழே

ஆக்கியோன் - யாழ்ப்பாணம் வீரமணிஐயர் என அவர் நாமத்தை அனைவரும் அறியும் வண்ணம் இடம்பெறச் செய்துள்ளமை, ஐயாவிற்கு மட்டுமல்ல, நம் நாட்டிற்கே அதிலும் யாழ்ப்பாணத்திற்கே பெருமை தேடித்தந்த விடய மாகும். அந்தளவிற்கு பிறநாட்டவரும் வியந்து பாராட்டு மளவிற்கு தமிழையும் சைவத்தையும் தனது இசையால் உலகறியச் செய்தவர் வீரமணி ஐயா அவர்கள்.

தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் மும்மொழித் தேர்ச்சி பெற்ற ஐயாஅவர்கள், ஊற்றுப்போல் சொல்லும் பொருளும் நிறைந்தபாடல்களை இயற்றும் வல்லமை மிக்கவர். இதுவரை எவரும் பாடாத 35 தாளங்களிலும் 175 தாளங்களிலும் தமிழிசைப்பாடல்கள் பாடியுள்ள ஒரேயொரு சாகித்தியகர்த்தா இவர் ஒருவர்தான். கர்நாடக சங்கீதத்தில மிகப்பெரிய சாதனையாக ஐயாவால் ஆக்கப்பெற்ற "சாரங்கன் மருகனே....." எனும் இராகமாலிகா விளங்குகிறது. இதில் உள்ள சிறப்பு யாதெனில் ஒவ்வோர் அடிகளிலும் இரண்டு இரண்டு ராகங்கள் இணைந்துவரும்.அதில் ஒன்று ஆண்ராகம் மற்றையது பெண்ராகம். அரை ஆவர்த்தனங் களுக்கு ஒரு இராகமாக - தம்பதிகளாக அவ்விரு ராகங்களும் ஒன்றையொன்று தழுவிவரும் பாங்கு இசைவல்லோரால் சுவைத்து இன்புறத்தக்கவை. இதனை ராகாராகினி எனச் சிறப்பாக அழைப்பர். இதன் பெருமை உணர்ந்து இப்பாடலை மகாராஜபுரம் சந்தானம் அவர்கள் பாடியுள்ளார்.

வீரமணி ஐயா அவர்கள் பல்துறை விற்பன்னராக இருப்பினும் அவரின் முத்திரை பதிந்தது நாட்டிய நாடகங்களே ஆகும். நாட்டிய நாடகங்கள் என்றாலே அது வீரமணிஐயாவையே சாரும் எனக் கூறுமளவிற்கு, இலங்கையின் எப்பாகத்திலும் அவரது படைப்புகள் சிறந்து விளங்குகின்றன. இதுவரை 350 இற்கு மேற்பட்ட நாட்டிய நாடகங்கள் ஐயாவால் ஆக்கப்பெற்றுள்ளன. முத்தமிழையும்

தொடர்புபடுத்தி பல்வேறு விதமான இசைக்கோலங்களையும் பல்வேறுவிதமான மாற்று வடிவங்களையும் பயன்படுத்தி புதிய புதிய மெட்டுக்கள், ஜதிகள் பொலிவுடன் விளங்க இவர் ஆக்கியுள்ள நாட்டிய நாடகங்களில் தமிழிசை துள்ளி விளையாடும், சைவச்செழுமை, தேசப்பற்று, இனவிடுதலை, பக்தி, சமய சமரசம் என்பன வெளிப்பட்டு நிற்கும்.

இசையால் வசமாக்கி தமிழ் இதயங்களை இன்புற வைத்த இசைமாமணி வீரமணிஐயா அவர்கள் நினைத்த மாத்திரத்து தனது சாகித்தியத்தை உருவாக்கிவிடும் ஆற்றல் வாய்ந்தவர் ஐயா அவர்களின் பாமாலையைப் பெறாத ஆலயங்களே இல்லை எனலாம். எடுத்துக் காட்டாக, யாழ் பல்கலைக்கழக ஸ்ரீ பார்வதி சமேத பரமேஸ்வரன் ஆலயத் தின் மீது பாடப்பெற்ற திருவூஞ்சலை குறிப்பிடலாம். அது மட்டுமன்றி அதிகமான ஆலயங்களுக்கு திருப்பள்ளி யெழுச்சி, கீர்த்தனைகள் என்பவற்றையும் பாடியுள்ளார். அவற்றில் பல இசைக்கலைஞர்களின் பாடப்பட்டு இறுவட்டுக் களாக ஆலயங்களில் வெளியிடப்பட்டும் உள்ளன.

வேலனை புளியங்கூடல் மகாமாரி கீர்த்தனை கோப்பாய் கற்பகவிநாயகர் கீர்த்தனை, கோண்டாவில் தில்லையம்பதி சிவகாமியம்பாள் கீர்த்தனை, சுட்டிபுரம் கண்ணகையம்மன் மீது பாடப்பட்ட பாடல் கதிர்காமக் கந்தன் புகழ் கூறும் 108 பாடல்கள், திருமயிலை கற்பகாம்பாள் புகழ்பாடும் 72 மேளகர்த்தா இராகத்திலமைந்த கீரத்தனைகள் என்பன ஐயாவின் கவிநயத்திற்கும், இசைத் திறமைக்கம் ஒரு சில சான்றுகளாகும்.

வண்ணார்பண்ணை ஸ்ரீ விசுவேசவிநாயகர் ஆலயத்தின் பரிபாலன தெய்வமான ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத கல்யாண வேலவர் ஊஞ்சற்பாடலும் வீரமணி ஐயா

அவர்களின் ஆக்கமே. இவ்வாறு தமது மதம் சார்ந்த பாடல்கள் மட்டுமன்றி திருக்குர்ரானை தழுவிய இஸ்லாமிய கீர்த்தனைகள், பைபிளை தழுவிய கிறிஸ்தவ கீர்த்தனைகள் என்பவற்றையும் பாடி தனது இசையால் அனைவரையும் கவர்ந்தார்.

**கல்விப்பணி:**

வீரமணி ஐயா தனது இயலிசை நாடக ஆற்றலால், இசை, நடன ஆசிரியராக மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் மானிப்பாய்மகளிர்கல்லூரியிலும் பணி புரிந்து பல்வேறு மாணவர்களை இசையிலும் நடனத்திலும் சாதனைபுரிய வைத்தார். அதன் மூலம் எமது மண்ணுக்கேயுரிய தமிழ்கலைப் பாரம்பரியத்தை வளர்த்தெடுத்த பெருமையும் பெற்றார். பாடசாலைப் போட்டிகளில் இவரது நாட்டிய நாடகங்களே அரங்கேறி முதற் பரிசுகளையும்தட்டிச் செல்வதோடு வெளியுலகத்தின் கவனத்தையும் ஈர்த்துக் கொண்டன. எனில் மிகையில்லை ஐயா அவர்களின் சாதனைகளுக்கெல்லாம் பக்கபலமாய் விளங்கியவர் அவரது முதலாவது கலாரசி கையும் விமர்சகியுமான அன்புத் துணைவியார் ஸ்ரீமதி ருக்மணி அம்மாள் ஆவார்

மேலும் ஐயா அவர்கள் முப்பத்து மூன்று வருடங்கள் பலாலி கோப்பாய்ஆசிரியகலாசாலை, மற்றும் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகநுண்கலைப்பீடம் ஆசிரியராக விரிவுரையாளராக பணியாற்றி தமது கலைவாரிசுகளை உலகளாவிய ரீதியிலும் இன்றும் கலைச்சேவைகள் பல புரியவைத்துள்ளார். அது மட்டுமல்ல ஈழத்தமிழர்களின் அதியுயர் கல்விக்களமாக விளங்கும் யாழ் பல்கலைக் கழகத்தில் அது ஆரம்பிக்கும் போதே (1971 ஆம் ஆண்டு)

நுண்கலைகளுக்குகெனத் தனியாக நுண்கலைப்பீடம் ஒன்று நிறுவப்படுவதற்கும் ஐயா அவர்களே காரணம் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும். இவ்வாறு யாழ் மண்ணுக்கும் தமிழ்கலைகளின் வளர்ச்சிக்கம் அரும் பணியாற்றிய வீரமணிஐயா அவர்களுக்கு யாழ் பல்கலைக் கழகம் தனது வெள்ளிவிழா 1999 ஆம் ஆண்டுக்கான பட்டமளிப்பு விழாவில் "கௌரவ முதுகலைமாணி" பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது. ஐயாவின் கலையுலக வரலாற்றில் இடம்பெற்ற பல்வேறுசாதனைகளுக்கு கிடைத்த கௌரவங் களும் பரிசுகளும் விருதுகளும் எண்ணற்றவை, அவற்றில் சௌந்தர்யலகரிக்கீர்த்தனா ஸதகம் எனும் நூல் சாகித்யமண்டலப்பரிசைப் பெற்றமை, வடக்கு கிழக்கு மாகாணக்கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சரால் ஐயாவின் கல்விச்சேவையைப் பாராட்டி ஆளுநர்விருது பெற்றமை என்பன ஒரு சிலவாகும் மேலும் ஐயாவின் கலைத் திறமைகளுக்கு கிடைத்த பட்டங்களில் இயலிசை வாரிதி ஸாகித்ய சிரோமணி, கலாரத்னா சிருஷ்டி ஞாயிறு கலாபூஷணம், மஹாவித்வான் என்பன குறிப்பிடத் தக்கவை.

இவரது பெரும்புலமையை உணர்ந்த தமிழ கத்தின் பெரும்கலைஞர்களான எம். டி. ராமநாதன், பாபநாசம் சிவன், டாக்டர் பாலமுரளிகிருஷ்ணா, ஜி. என். பி. வெங்கட்ராம ஐயர், முசிறி சுப்பிரமணிய ஐயர், பேரதசிரியர் சாம்பமூர்த்தி, இ. கிருஷ்ண ஐயர், கிருபானந்த வாரியார், சா. கு. கணபதிஐயர் சி. கணேசஐயர் இராமையாபிள்ளை ஆகியோர் அவ்வப்போது இவரைப் பாராட்டி எழுதியுள்ளனர்.)

காலம் காலமாக இப் பெரும் கலைஞர் வீரமணி ஐயரைப் பாராட்டியும் கௌரவித்தும் விரு வழங்கியும் பாராட்டுப் பத்திரங்கள் வழங்கியும் பல நிறுவனங்களும் தனி மனிதர்களும் இறும்பூதெய்தியுள்ளனர். அவற்றுள் சிலவற்றை இங்கே பட்டியலாகக் காணலாம்.

| | |
|---|---|
| இயலிசை வாரிதி - தியாகராஜ கான மையம், கொழும்பு | 24 - 06 - 1968 |
| ஸாஹித்ய சிரோமணி - நல்லை ஆதீனம் | 04 - 05 - 1971 |
| நாட்டிய சாஹித்ய கலாவேந்தன் பரமானந்த வாசிகசாலை, இணுவில் | 15 - 01 - 1973 |
| முத்தமிழ் வாரிதி - கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை | 27 - 03 - 1980 |
| கவிமாமணி - வட இலங்கை சங்கீத சபை | 10 - 06 - 1982 |
| ஸாஹித்ய ஸாகரம் - கோப்பாய் ஆசிரியர் கலாசாலை | 21 - 07 - 1986 |
| ஸாஹித்ய மாமணி - நாவலர் சபை | 23 - 11 - 1986 |
| கலாரத்னா - கலாசார அலுவல்கள் திணைக்களம் | 21 - 12 - 1986 |
| சிருஷ்டி ஞாயிறு - பிரதேச அபிவிருத்தி அமைச்சு | 03 - 01 - 1987 |
| மஹாவித்வான் - நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் | 29 - 03 - 1998 |
| அருட்கலை வாரிதி - இந்துசமய கலாசார அமைச்சு | 21 - 02 - 1993 |
| கலாபூஷணம் - கலாசார அமைச்சு | 22 - 05 - 1997 |
| சம்வாதீஸ்வரர் - நல்லூர் ஸ்ரீ பாலகதிர்காம தேவஸ்தானம் | 08 -07 - 1998 |
| ஞானக் கவிமணி - இந்து சமயப் பேரவை | 11 - 10 - 1998 |

| | |
|---|---|
| கௌரவ முதுகலைமாணி, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் | 1999 |
| ஆளுநர் விருது - வடக்கு, கிழக்கு மாகாணகல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு | 2000 |
| முத்தமிழ்க் கலாநிதி - சர்வதேச இந்துமதகுருபீடம் | 10 - 04 - 2002 |
| லலிதகலா அபிஞர் - கும்பகோணம் அனைத்து இசைககலைஞர்கள் | 06 - 01 - 2003 |
| அருள் இசை வித்தகர் - சென்னை, உலகத்தமிழர் மையம் | 07 - 01 - 2003 |
| கௌரவப் பட்டம் இலங்கை கம்பன் கழகம் | 2003 |

இவற்றை விட அவ்வப்போது அவருக்கு ஆசுகவி, மதுரகவி, அருட்கவிச் செம்மல், ஸங்கீத வித்வத் ஸாகரம், முத்தமிழ் வித்தகர், முத்தமிழ்ச் சுரபி முதலிய பட்டங்களும் வழங்கப்பட்டுள்ளன.

1999 இல் இடம்பெற்ற யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வெள்ளிவிழா ஆண்டிற்கான பட்டமளிப்ப விழாவில் வீரமணி ஐயருக்கு கௌரவ முதுமாணி வழங்கப்பட்டது.

2000 ஆம் ஆண்டில் வடக்கு, கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையதட்டுத்துறை அமைச்சின் ஆளுநர் விருது வழங்கப்பட்டது.

2003 ஆம் ஆண்டில் இலங்கை கம்பன் கழகத்தின் கௌரவிப்பும் கிடைத்துள்ளது.

அச்சேறி வெளிவந்துள்ள அவரது முக்கியமான சில நூல்களையும் இங்கு பட்டியலிடலாம்.

- நல்லைக் குறவஞ்சி நாட்டிய நாடகம்
- கதிர்காம கந்தன் குறவஞ்சி
- அர்ஜூனன் தவம்
- அஷ்டலமி
- பக்தப் பிரகலாதன்
- சுத்திரா பரிணயம்
- கர்ணம்
- ஸ்ரீ கிருஷ்ணாவதாரம்
- நவரஸ இராமயணம்
- ராதையின் நெஞ்சம்
- திருஞான சம்பந்தர்
- விஸ்வரூப தர்சனம்
- திருவாசகம் தந்த மணிவாசகர்
- ஸத்யம் சிவம் சுந்தரம்
- கண்ணப்பர் குறவஞ்சி நாட்டிய நாடகம்.

இம் மாபெரும் கலைஞரது இன்னும் பல பிரபந்தங்களும் நாட்டிய நாடகங்களும் அச்சுவாகனமேறக் காத்திருக்கின்றன. நாட்டியத்திற்கேற்ற பல பதங்களும் தில்லானாக்களும் அழியாது பாதுகாக்கப்பட்டு அடுத்த தலைமுறைக்குக் கையளிக்கப்படவேண்டியுள்ளது.

இத்தகைய பெருமைக்கும் பெருமதிப்புக்கும் உரியவரான ஸ்ரீமான் வீரமணிஐயரவர்கள் தமது அறுபத்து நான்காவது வயதில் 1996 இல் தமது மனைவியைப் பறிகொடுத்தார். தனிமையில்வாடிய அவரது கலை வாழ்க்கைக்கு ஒரு துணை அவசியம் என உணர்ந்த உறவினரும் ஊரவரும் நல்லூரைச் சேர்ந்த சிவஸ்ரீ இரத்தினசாமிக் குருக்களின் புதல்வி சுசீலாதேவி அவர்களை 1997 அல் திருமணம் செய்து வைத்தனர்.

சிறியதொரு இடைவெளியின்பின் ஐயரவர்களின் கலைப்பணி மீண்டும் வீறுகொண்டெழுந்து சிறுக்கலாயிற்று. அவரது கலைப்பணிக்க ஸ்ரீமதி சுசீலாதேவி அவர்கள் அருந்துணை நல்கினார்.

செவ்விய வாழ்வில் சீரிய பணியை நிறைவுசெய்த செழுங்கலைஞரான மஹாவித்வான் வீரமணி ஐயரவர்கள் 07 - 10 - 2003 இல் கற்பகாம்பாளின் பொற்பதங்களைச் சென்றடைந்தார். அவர் விட்டுச்சென்ற அழியாச் சொத்துக் களான கலைப்படைப்புக்களைப் பேணிப் பாதுகாத்து அடுத்த தலைமுறையினரின் ஆய்வுக்கும் தந்துகொண்டிருக்கிறார் அவரது துணைவியார் ஸ்ரீமதி சுசிலாதேவி அவர்கள்.

**இயலிசைவாரிதி. பிரம்மஸ்ரீ. ந. வீரமணிஐயர் அவர்களுக்கு**
**நிறுவனங்கள் வழங்கிய பட்டங்களின் விபரங்கள்**

| வழங்கப்பட்ட பட்டங்கள் | வழங்கியவர்கள் | வழங்கப்பட்ட திகதி |
|---|---|---|
| "இயலிசை வாரிதி" | தியாகராஜகான அமையம், கொழும்பு | 24.06.1968 |
| "நாட்டிய சாகித்ய காலவேந்தன்" | பரமானந்த வாசிகசாலை | 15.01.1973 |
| "சாகித்ய சிரோன் மணி" | ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாத தேசிக | |
| | ஞானசம்பந்த பரமாச்சாரிய ஸ்வாமிகள் | 04.05.1971 |
| | | 27.03.1980 |
| "முத்தமிழ் வாரிதி" | கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை | 10.06.1982 |
| "கவிமாமணி" | வட இலங்கை சங்கீதசபை | 21.12.1986 |
| "கலாரத்னா" | கலாசார அலுவல்கள் திணைக்களம் | 21.07.1986 |
| "சாகித்ய சாகரம்" | ஆசிரியர் கலாசாலை கோப்பாய் | 23.11.1986 |
| "சாகித்திய மாமணி" | நாவலர் சரப | 03.01.1987 |
| "சிருஷ்ஷ ஞாயிறு" | பிரதேச அபிவிருத்தி அமைச்சு | 21.02.1993 |
| "அருட்காலை வாரிதி" | இந்து சமய கலாசார அமைச்சு | 22.05.1997 |
| "கலாபூசணம்" | கலாச்சார அமைச்சு அலுவலர் திணைக்களம் | 29.03.1998 |
| "மஹாவித்துவான்" | நல்லை திருஞானசம்பந்தர ஆதீனம் | 08.07.1998 |
| "சம்பாதஸ்வரர்" | ஸ்ரீபாலகதிர்காமதேவஸ்தானம் | 11.10.1998 |
| "ஞானக்கவிமணி" | இந்துசமயப் பேரவை | |
| "கௌரவ முதுகலைமாணி" | யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம் | 10.04.1999 |
| "முத்தமிழ் கலாநிதி" | சர்வதேச இந்துமத குருபீடம் | 06.01.2003 |
| "லலிதகலா அபிஞ்ய" | கும்பகோண நகர அனைத்து இசைக்கலைஞர் | 07.01.2003 |
| "அருள் இசை வித்தகர்" | உலகத்தமிழர் மையம் | |





வள்ளல்

## சேர் பொன். இராமநாதன்

( 16.04.1851 - 26.11.1930 )

# வள்ளல்
# சேர். பொன்னம்பலம் இராமநாதன்
# (16.04.1851 - 26.11.1930)
# வாழ்க்கை வரலாறு

ப. கணேசலிங்கம்,
சிரேஷ்ட விரிவுரையாளர்,
இந்துநாகரிகத்துறை.

கெருடாவில் ஆறுமுகத்தாபிள்ளை குமாரசாமி முதலியாரின் அருமைமகள் செல்லாச்சி என்பாரைத் தாயாரா கவும் ஆனைக்கோட்டை அருணாசலம் பொன்னம்பலம் முதலியாரைத் தந்தையாராகவும் கொண்ட இராமநாதன் 16.04.1851 ஆம் நாளில் தோன்றினார்.

இவருக்கு அண்ணனாக 07.12.1849இல் தோன்றி யவர் குமாரசாமி முதலியார் அவருக்கு தாய்வழிப் பேரனாரின் பெயரிடப் பெற்றது. இவருக்குப் பின்னர் 14.09.1853 ஆம் நாளில் தம்பியாராக வந்தவர். அருணாசலம் இப்பெயர் தந்தைவழிப் பேரனாரின் பெயராகும்.

பொன்னம்பலமுதலியார் இராமேசுவரத்து இராமநாதப்பெருமானை வணங்கி அருள்பெற்றுப் பெற்ற மைந்தன் இராமநாதன் நாட்டுக்குச் சேவை செய்வதற் கென்றே அவர் வரங்கேட்டார் என்பது வரலாறு.

மைந்தர் மூவரும் எல்லா வகையான சிறப்புக் களும் மேன்மைகளும் பெற்று இராசாங்கக்கல்லூரி என்னும்

றோயல்கல்லூரியில் படித்து உருவானவர்கள், அண்ணன் குமாரசுவாமியும் இராமநாதனும் சென்னை இராசதானிக் கல்லூரியிலும் படித்தவர்கள்.

பட்டம் பெறாமல் இலங்கைக்கு மீண்ட இருவரும் சட்டம் பயின்று மூத்தவர் புறொக்ராவும், இளையவர் அட்வொக்கேற்றாகவும் சித்தி பெற்றார்கள், தம்பி அருணாசலம் றோயல் கல்லூரியில் தலைமாணாக கனாயிருந்து பெறுதற்கரிய புலமைப்பரிசில்கள் யாயும் பெற்று லண்டன் சென்று கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்திலே முதுமாணிப்பட்டம் முறுக்கேற்ப பெற்று மீண்ட போது இலங்கையில் சிவில்சேவை என்னும் துறைக்குரிய வித்த கமும் சட்டத்துறையில் பரிஷ்ரர் என்னும் தகுதியும் பெற்ற மீண்டார்.

சகோதரர் மூவரையும் அன்புடன் கண்காணித் தவர் தாய்மாமன் சேர்முத்துக்குமாரசாமி ஆவர். முத்துக்குமாரசுவாமி ஆசியாக்கண்டத்துக்கே பெருமை தேடிய பெரியவர். அவர் மருமகன் இராமநாதனுக்குக் கொழும்பில் 'சுகஸ்தான்" என்னும் மாளிகையை நன்கொடை யாகக் கொடுத்தவர்.

இராமநாதனை உருவாக்கிய தலையாய மூவர் பெரியவர்களுள் தாய்மாமனுக்கு அடுத்தபடியாக தமிழ்த் தாத்தா தாமோதரப்பிள்ளை விளங்கினார். அடுத்த வராகப் பெரிய பறங்கிப்பிரபு என்று பெயர்பெற்ற றிச்சாட் மோகன் இவருக்குச் சட்டத்துறை பழக்கியிருந்தார்.

தம்மை உருவாக்கிய மூவர் பிரமுகர்கள் என்று இராமநாதன் அடிக்கடி நன்றி தெரிவித்தல் வழக்கம்.

கொழும்பில் ஒருகாலத்தில் பெருஞ்செல்வராக விளங்கிய நன்னித்தம்பி முதலியார் அவர்கள் தமது இரண்டாம் மகள் செல்லாச்சி ஆச்சி என்பாரை இராமநாதனுக்கு மணஞ்செய்து வைத்தார்கள்.

நன்னித்தம்பிமுதலியார் ஆறுமுகநாவலருக்கு முதன் முதலாகப் பொன் கொடுத்துச் சைவப் பணிபுரியத் தூண்டிய பெருமகனாருமாவார்.

இலங்கை அரசியற் பரிபாலனத்திற்காக ஆங்கிலேயர் 1833ஆம் ஆண்டில் நிறுவிய சட்டசபை 1931 ஆண்டுவரை நிலவியது அரிய தமிழ் பேசும் மக்களின் பிரதி நிதியாக முதலில் நியமனம் பெற்றவர் ஆறுமுகத்தாபிள்ளை குமாரசுவாமி முதலியாராவர். அவருக்குப்பின் பிரதிநிதியாக இருந்தவர்களுள் அவருடைய மைந்தன் முத்துக்குமாரசுவாமி குறிப்பிடத்தக்க பெரியவர் அவரே. கலாவிநோதர் ஆனந்தக்குமாரசுவாமியின் அரு மைத் தந்தையராவர்.

முத்துக்குமாரசுவாமி றைற் பட்டம்பெற்றுப் புகழீட்டியவர்களுள் முன்னோடியுமாவர். அவர் 1879இல் கால மானதும் தமிழ் பிரதிநிதியாக சட்டசபையை அலங்கரிப் பதற்குத் தகுதியானவர் யாவர் என்று ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், சுதுமலை விசுவநாதபிள்ளை, நவாலி கனகசபை முதலா னோர் தேடித்திரிந்தார்கள்.

சட்டசபையை அலங்கரிப்பதற்குத் தகுதியுடை யவர் பொன்னம்பலம் இராமநாதன் என்று கண்டார்கள். அவர்கள் பெருந்தொகையான மக்கள் கூட்டத்திலே தங்கள் முடிபைத் தெரிவித்ததும் மக்கள் இராமநாதனைத் தலைவராக ஏற்றுக்கொண்டதும் தேசாதிபதி அவரைச் சட்டசபை அங்கத்தவராக நியமித்தார்.

அன்று 1879இல் நியமனம் பெற்ற இராமநாதன் 26.11.1930ஆம் நாளில் காலமாகும்வரை சட்டசபையில் ஐம்பதாண்டுகள் அங்கத்துவம் வகித்தார். அவர் தமது எண்பதாண்டு வாழ்வில் ஐம்பதாண்டு அரசியற் பணி புரிந்தார்.

இராமநாதனின் ஆளுமை பெரிது. அவர் இலங்கையை ஆளவந்த தேசாதிபதிகள் பதினொருவரைக் கண்டவர். அவர் தேசாதிபதிகளுடன் இதமாகவும் வன்மையாகவும் பேசி நாட்டுக்குத் தேவையானவற்றைப் பெற்ற சந்தர்ப்பங்கள் அறிக்கைகளில் இடம் பெற்று வரலாற்றுண்மையாக உள்ளன.

அவர் 1910முதல் 1920 வரை இலங்கையின் ஏகப் பிரதிநிதியாக இருமுறை தெரியப்பெற்றவர். இலங்கை முழுவதும் ஒரு தொகுதியாயிருப்பதற்குப் பிரதிநிதியானவர் ஆங்கிலேயர, பறங்கியர், ஐரோப்பியர், முஸ்லிம்கள், சிங்களவர், தமிழர் எல்லோருக்கும் பிரதிநிதியாயிருந்தார்.

அவர் தேசாதிபதி ஒருவரை இடமாற்றஞ் செய்வித்துப் புதிய தேசாதிபதியை நியமனம் செய்ததும் உண்டு. அவர் வெள்ளையரிடம் பூரண சுதந்திரம் கேட்டார் அவருடைய வாக்கில் அது பூர்ணசுயராஜ்யம் என்பதாகும்.

இலங்கை எங்கும் சைவப்பாடசாலைகளை உருவாக்குவதற்காக அவர் சைவ வித்தியாவிருத்திச் சங்கத் தைத் தாபித்தார். தாமே தமது பொறுப்பில் பெண்களுக்காக

இணுவிலில் இராமநாதன் கல்லூரியை 1913இல் நிறுவினார். பின்னார் ஆண்களுக்கான பரமேஸ்வரக் கல்லூரியைத் திருநெல்வேலியில் 1921இல் நிறுவினார்.

கொழும்பில் கருங்கற்களாலாய பொன்னம்பல வாணேஸ்வரர் கோயில் இருபது இலட்சம் ரூபா செலவில் 1912இல் அமைத்தார். யாழ்ப்பாணத்தில் பரமேஸ்வரன் ஆலயத்தை 1926இல் அமைத்தார்.

தமிழ்நாட்டில் தமிழ் மன்றங்களிலும் சைவப் பெருமன்றங்களிலும் அவர் தலைமைதாங்கிப் பேசியவற்றை அந்நாட்டுப்பெரியவர்கள் பாமாலை சூட்டிப் போற்றினார்கள்.

அவர் அமெரிக்கா, இங்கிலாந்து முதலாய வெளிநாடுகளில் சைவம் பேசிய திறமையை எல்லோரும் போற்றினார்கள். அவர் தமது மாளிகை யனைய மனையில் ஆஸ்தானப் புலவர்களை அணைத்துத் தமிழ்த்தொண்டு செய்தார். அவர் இயற்றிய நூல்கள் பல.

அவர் எமக்கு விட்டுச்சென்ற பாரிய முதுசொம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாகும். அவர் இருமுறை திருமணம் செய்து முதல் தாரத்து மனைவியிடம் ஏழுபிள்ளை கள் பெற்றிருந்தார். இரண்டாந்தாரமாக மணஞ்செய்த பெண்வழியில் மகளொருத்தியைப் பெற்று நடேசபிள்ளை என்பாரை மருமகனாக்கிக் கொண்டார். அவர் எமக்கு விட்டுச் சென்ற சொத்து மிகவதிகம்.


அவர் எமக்கு விட்டுச்சென்ற சைவத்தமிழ்ப் பாரம்பரியம் சனாதன தருமமாகும். அதைப் பேணிப்பாது காப்பதற்கே அவர் திருக்கோயில்களையும் சைவக் கல்லூரி களையும் கட்டித்தந்தார் அவர் புலவர்கள் புகழ வாழ்ந்த பெரும்புரவலர். அவரைப் போன்ற வள்ளலை இலங்கை வரலாற்றில் காணவியலாது அவர் எல்லாம் பரமேஸ்வரப் பெருமான் தந்தவை என்று பாடி மகிழ்ந்தவர். அவர் இலங்கைத் தேசிய வீரர்களுள் தலையாயவர். அவரை ஈழகேசரி எனப் பெரியவர்கள் வழங்கினர் அவர் தலைசிறந்த ஆங்கிலப் பேச்சாளர்.

கோயில் INU. கண்ணன் (உதவி)

SIRPON 1999 OCT 09
சிவ P. பாலு



"KALAA POOSHANAM"
K.S.SIVAGNANARAJAH
RETIRED VICE PRINCIPAL
ADIYAPATHAM ROAD
KOKUVIL WEST



ஷாம்பவி பதிப்பகம், நீர்வேலி, & யாழ்ப்பாணம்.021 2224143